Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1325)


முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 07 செவ்வாய்க்கிழமை (20.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 171



காதலில் விழ விருப்பம் (07)



ஏவுகணையை நொருக்குவோம் (13)



வரம்பு மீறும் ராகுல்... (12)



பாம்பாசனம் சுகம் தரும் (10)

# ஜனநாயக நாட்டின் இறைமை உதாசீனம் செய்கிறது நோர்வே



## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து இலங்கை கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வில் இலங்கைக்கு எதிரர்க தீர்மானம் நிறைவேற்றப்பட உள்ள நிலையில், நோர்வே அதிகாரிகள், க்ளோபல் தமிழ் போராம் (15 ஆம் பக்கம் பார்க்க)


## சுனந்த தேசப்பிரிய கைது

(கொழும்பு)

இலங்கையின் பிரபல ஊடகவியலாளரான சுனந்த தேசப்பிரிய சுவிஸ் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றினை ஊடகவியலாளரான சுனந்த படம்பிடித்துக் கொண்டிருந்த போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க பிரேரணை இந்தியா ஆதரிக்கும்



## பிரதமர் மன்மோகன்சிங் அறிவிப்பு

(புதுடில்லி)

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தை முழுமையாக அறிந்த பின்னர் அதனை ஆதரித்து வாக்களிக்க இந்தியா தயாராக உள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் நேற்றைய தினம் இந்திய நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங் நேற்று தனது உரையில் தெரிவித்ததாவது,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடரில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளமை எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

இதுகுறித்து தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களின் கவலைகளை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களது கவலையில் நானும் பங்கேற்கிறேன், பகிர்ந்து கொள்கிறேன். இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காக பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. அதில் முக்கிய கவனம் செலுத்தி வருகிறோம்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

# கருணாநிதி வரவேற்பு உண்ணாவிரதமும் இரத்து



(சென்னை)

இலங்கை தொடர்பான அமெரிக்க பிரேரணைக்கு இந்தியா ஆதரவளிக்க உத்தேசித்துள்ளதாக இந்திய பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளதை தி.மு.க. தலைவர் கருணாநிதி வரவேற்றுள்ளதுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி தான்மேற்கொள்ளவிருந்த உண்ணாவிரதத்தையும் கைவிடத் தீர்மானித்துள்ளார்.

அத்துடன் இன்றைய தினம் (15 ஆம் பக்கம் பார்க்க)

# மழுப்பலான பயனில்லாத பதில்

(சென்னை)

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்தில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு ஆதரவளித்து வாக்களிக்கும் மனப்பாங்கில் இந்தியா உள்ளது என இந்தியப் பிரதமரின் அறிவிப்பு 'மழுப்பலான, பயனில்லாத பதில்' என விமர்சித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)



# பிரேரணை குறித்த கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு அரசாங்கம் தயார்

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணை தொடர்பான எந்தவொரு கேள்விக்கும் பதிலளிப்பதற்கு இலங்கை பிரதிநிதிகள் தயாராகவே உள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை சார்பாக அமைச்சர் மகிந்த சமரசிங்க உள்ளிட்ட பிரதிநிதிகள் குழு கலந்துகொண்டுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் இடம்பெறவுள்ள வாக்கெடுப்பினை எதிர்கொள்வதற்கு விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்கள் ஊடாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகளை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் தீர்மானம் வரவேற்கிறது கூட்டமைப்பு



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான அமெரிக்காவின் பிரேரணைக்கு ஆதரவளிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்ததை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

இந்திய அரசாங்கத்தின் இத்தீர்மானம் மிகவும் வரவேற்புக்குரியது. ஏனெனில், தேசிய நல்லிணக்கம் மற்றும் நிரந்தர அரசியல் தீர்வு என்பனவற்றுக்கு அவர்களின் முயற்சிகள் மிகவும் முக்கியமானவை என த.தே.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராஜா தெரிவித்தார்.

. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாட்டிற்கு எதிரானது அல்ல எனவும் இந்தியாவின் தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதானது நல்லிணக்கத்திற்கான முயற்சிகளில் (15 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவிருந்த புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்தத் தேர்தலை ஆட்சேபித்து வாக்காளர்கள் சிலர் தாக்கல் செய்திருந்த மனுக்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோதே நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

குறித்த பிரதேசசபைகளுக்குட்பட்ட பகுதிகளில் நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகளும் மீள்குடியேற்றப்பணிகளும் பூரத்தியடையவில்லை என மனுதாரர்கள் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த நடவடிக்கைகள் நிறைவுபெறும் வரை தேர்தலை ஒத்திவைக்குமாறு அவர்கள் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைய குறித்த மனுக்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஹிலாரியை சந்திப்பதற்கு அமைச்சர் பீரிஸ் தீவிர முயற்சி

(ஜெனிவா)

அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளின்டனைச் சந்திப்பதற்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஊடாக அமைச்சர் பீரிஸ் தகவல் அனுப்பியுள்ளதாகவும், இந்தச் சந்திப்புத் தொடர்பாக பொருத்தமான நாளைக் குறிப்பது குறித்து கொழும்பிலும், வொஷிங்டனிலும் உள்ள இராஜதந்திரிகள் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் மற்றும் அரசியல் தீர்வு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பிலான இலங்கையின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து விளக்கம் அளிக்க இந்த மாத ஆரம்பத்தில் வொஷிங்டனுக்கு வருமாறு வெளிவிவகார அமைச்சர் பீரிஸுக்கு அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் கடந்த ஜனவரி மாத இறுதியில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இக்கடிதத்துக்கு வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் பதில் அனுப்பாத நிலையில் அமெரிக்காவின் ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக ஆபிரிக்க நாடுகளின் ஆதரவைப் பெறும் முயற்சிகளை அவர் மேற்கொண்டிருந்தார். (15 ஆம் பக்கம் பார்க்க)

# காத்திருக்கின்றன பத்தாயிரம் குடும்பங்கள் யாழ்.குடாவில் மீள் குடியமர்வதற்காக



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இதுவரை 37 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடிமர்த்தப்பட்டிருப்பதாகவும் மேலும் 10 ஆயிரம் குடும்பங்கள் மீள் குடியமர்வுக்காகப் பதிவுகளை மேற்கொண்டு காத்திருப்பதாகவும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலைஞர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை மற்றும் கலைக் கூடங்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு தொடக்கவுரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது,

சுமார் 25 வருட கால இடம்பெயர்வுகளைச் சந்தித்த மக்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இம்மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளுக்கு 61 ஆயிரம் ரூபா மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இன்னமும் இரண்டு ஆண்டுகளில் வீதி அபிவிருத்திப் பணிகள் முடிவடைந்துவிடும். ஐந்து ஆண்டுகளில் குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்துவிடும். இதற்கென 21 ஆயிரம் மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளது. மின்சாரப் பிரச்சினை இந்த ஆண்டுக்குள் தீர்ந்துவிடும்.

இதேவேளை, ரயில் பாதை புனரமைப்பு, வீடமைப்பு போன்ற பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கான நிதி மேற்குறித்த நிதி ஒதுக்கீட்டில் உள்ளடக்கப்படவில்லை. அமைச்சர்கள் எமது பகுதிக்கு விஜயம் செய்து மக்களது தேவைகளை மதிப்பீடு செய்திருக்கின்றனர். படிப்படியாக இவ் அபிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அரச அதிபர் குறிப்பிட்டார். (பா)

# முறை தவறிப் பெற்ற வாக்கு மூலம் யாழ்.நீதிமன்றம் நிராகரிப்பு

## மாத இறுதிவரை வழக்கு ஒத்திவைப்பு

(திருநெல்வேலி)

எதிரியினால் எழுதிக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள முடியாது எனக் கூறி அதனை நிராகரித்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் தீர்ப்பளித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரின் வழக்கு யாழ்.மேல் நீதிமன்றத்தில் நேற்று விசா ரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிபதியினால் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் 2.7.2009 இல் கொழும்பு கதிரேசன் வீதியைச் சேர்ந்த சிவநேசராஜா வினோத் குமார் (வயது-23) என்பவர் வவுனியாவில் வைத்து பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு சுயவிருப்பத்தின் பேரில் எழுதிக் கொடுத்ததாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்கு மூல சான்றுப் பொருளாக இவ்வழக்கில் இருந்தது.

எதிரி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி சட்டத்துக்கு அமைவாக எதிரியினால் இவ் வாக்கு மூலம் அளிக்கப்படவில்லையென்றும், இதனை ஒரு சான்றுப் பொருளாக முற்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வாதாடி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரிக்கும்படி கோரினார்.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி, இக்குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயவிருப்பத்தின் பேரில் அளிக்கப்படவில்லையெனவும், சட்டத்துக்கு அமைவாகப் பதிவு செய்யப்படவில்லை எனவும் கூறி அதனை நிராகரித்துத் தீர்ப்பளித்தார்.

எதிரிக்கு எதிராக வேறு சான்றுப் பொருட்கள் உள்ளனவா என ஆராய்வதற்கான அரச சட்டவாதி அவகாசம் கேட்டமைக்காக யாழ்.நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் வழக்கினை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (137)

# மெய்வல்லுநர் போட்டி

(முழங்காவில்)

பூநகரி-மட்டுவில் நாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் சி.விசுவாசம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மரட்ணம் பிரதம விருந்தினராகவும், இராணுவத் தளபதி லெப்டினன்ட் கேணல் ஆர்.டபிள்யூ. பொன்னம்பெரும சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (112)

# உலக கலைஞர்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

கலாசார மற்றும் கலைகள் அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் உலக கலைஞர்கள் தின நிகழ்வு நாளை புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், கலைநிகழ்வுகள் பல இடம்பெறவுள்ளதால் யாழ். மாவட்டத்திலுள்ள கலைஞர்களும் இதில் பங்குபற்றவுள்ளனர். (எஸ்)

# நடமாடும் சிகிச்சைப் பிரிவு தென்மராட்சியில் விரைவில்

## நீரிழிவு நோயின் தீவிரத்தைத் தணிக்கும் முயற்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை மற்றும் இவ் வைத்திய சாலையின் நீரிழிவுப் பிரிவினர் மற்றும் தென்மராட்சி அபிவிருத்திச் சங்கம் ஆகியோர் இணைந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் நீரிழிவு நோயாளர்களை இனங்கண்டு அவர்களின் வீடுகளுக்குச் சென்று தேவையான சிகிச்சையை வழங்கவுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக நீரிழிவு நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் இம்மாதம் குறைந்தது இதுவரை 30 பேர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், நீரிழிவு நோயாளர்கள் நோய் உச்சமடைந்து பாதிக்கப்பட்ட நிலையில் வைத்திய சாலைக்கு வருவதும் க்ண்டறியப்பட்டுள்ளது.

சிறுநீரகம் பாதிப்பு, கண் பார்வை மங்கிய நிலையில் கால்களில் மாறாத காயங்கள் போன்றவற்றுடன் வரும் நோயாளர்களுக்குப் பரிசோதனை செய்யப்படும் வரை நீரிழிவு நோய் உச்ச நிலையில் இருப்பது அவர்களுக்குத் தெரியாத விடயமாகக் காணப்படுகிறது.

இதைவிடச் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறப்பவர்களில் பெரும்பாலானோர் நீரிழிவு நோயாலேயே பாதிக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரும் நீரிழிவு நோயாளர்களின் விபரங்கள் கணினி மயப்படுத்தப்பட்டுச் சிகிச்சைக்கு தொடர்ந்து வரும் நோயாளர்களின் வீட்டுக்குச் சென்று அவர்களுக்குப் போதிய விழிப் புணர்வுகளை வழங்கிச் சிகிச்சையை மேற கொள்வதற்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11)

# கலாசார உத்தியோகத்தர் வெற்றிடங்கள் வடபகுதியில் நிரப்ப நடவடிக்கை

## கலாசார அமைச்சர் உறுதிமொழி



(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள கலாசார உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை இங்குள்ள வேலையற்ற பட்டதாரிகளைக் கொண்டு நிரப்பப்பட வுள்ளதாக கலை மற்றும் கலாசார அமைச்சர் கி.பி.ஏக்க நாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலைஞர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் கலாசார நிலையங்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

வடபகுதியில் அதாவது யாழ்ப்பாணத்தில் மட்டுமே மூன்று கலாசார உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர். ஏனைய மாவட்டங்களில் இவ்வாறு கலாசார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவில்லை. யுத்தம் நிறைவடைந்து அமைதி நிலவும் சூழலில் இவ்வாறு வெற்றிடமாக உள்ள கலாசார உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

தென்பகுதியில் இருந்து வட பகுதிக்கு கலாசார உத்தியோகத்தர்கள் எவரும் நியமிக்கப்படமாட்டார்கள். வடபகுதியில் உள்ள பட்டதாரிகளில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களுக்கே இந்நியமனங்கள் வழங்கப்படவுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், கலைஞர்கள் தங்களை வளர்த்துக் கொள்வதற்கு நிதியுதவியும் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர், இந்நிதியுதவியினைப் பயன்படுத்தி கலைஞர்கள் கலையை வளர்க்க வேண்டும் என்றும் தெரிவித்துக்கொண்டார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து தென்பகுதியில் மேடையேற்றப்பட்ட நாடகம் ஒன்று தேசிய ரீதியில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டதனையும், இச்சந்தர்ப்பத்தில் கலைஞர்களுக்குத்தான் ஞாபகமூட்டுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (பா)


**பாராட்டி வாழ்த்துகிறோம்**



இலங்கை நிர்வாக சேவை
விசேட தரத்திற்கு (Special Grade)
உயர்வு பெற்றுள்ள யாழ்ப்பாண
மாவட்டத்தின்
மேலதிக அரசாங்க அதிபர்

**திருமதி ரூபினி வரதலிங்கம் அவர்கள்**

மேன் மேலும் உயர்வு பெற அன்புடனும்
மதிப்புடனும் பாராட்டுகிறோம்.

அன்புடன் பாராட்டும்
லாலா சோப் உரிமையாளர்
அச்சுவேலி

(C/1333)


## எல்லை தாண்டிய மின்கட்டண நிலுவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையின் செலுத்தப்படாத மின்சாரக் கட்டணம் சுமார் 4 கோடி 50 இலட்சம் ரூபாவை எட்டியுள்ளது.

இதனால் எந்த நேரத்திலும் இவ்வைத்தியசாலைக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்படுவதற்கான அபாயம் தோன்றியுள்ளது. இவ்விடயம் குறித்து இலங்கை மின்சாரசபை அதிகாரிகளுக்கும், யாழ்.போதனா மருத்துவனை அதிகாரிகளுக்கும் இடையில் ஏற்கனவே பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன. (எஸ்)

## தண்டம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்த குருநகரைச் சேர்ந்த நபருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு யாழ் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் தண்டப்பணத்தின் அரைப் பகுதியினை வெகுமதியாக பொலிஸாருக்குச் செலுத்துமாறும் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டார். (எஸ்)


**சிறு விளம்பரங்கள்**

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1326)

நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயல்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது.

-கார்ல் மார்க்ஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## சுகாதாரத் துறைக்கு வழிகாட்டி

குடாநாட்டிலும் நவீன வசதிகளுடன் கூடிய தனியார் மருத்துவமனைகள் திறக்கப்பட இருக்கின்றன என்ற செய்தி நிச்சயம் வரவேற்புக்குரியதுதான். கொழும்பைப் போன்று இல்லாவிட்டாலும், முக்கியமான சில உடற் பரிசோதனைகளை மேற்கொள்ளக்கூடிய வகையிலேனும் தனியார் மருத்துவமனைகள் வருவது அரச மருத்துவமனைக்கு இருக்கும் நெருக்கடியைக் குறைக்கும். கொழும்புப் பயணச் செலவையும் சிரமத்தையும் குறைக்கும்.

குடாநாட்டினருக்கு மட்டும் என்றில்லை பொதுவாக நாடு முழுவதுமே சிறப்பான வைத்தியத் தேவைகளுக்கு கொழும்பை நாடியே செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாக மருத்துவ வசதியும் கல்வியும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியும் ஒரே தரத்திலும் கிடைக்கச் செய்வதுதான் எந்த நாட்டின் அரசுக்கும் இலட்சியமாக இருக்க வேண்டும்.

வளர்ச்சியடைந்த நாடுகளில், கல்வியும் வைத்தியமும் போக்குவரத்தும் அனைத்து ஊர்களிலும் ஒன்றுபோல சமமான முறையில் இருப்பது சிறப்பாகக் கவனிக்கப்படுகிறது. நகரத்து மாணவன் பெறக் கூடிய கல்வியை கிராமத்து மாணவனும் பெறக் கூடியதாக இருக்க வேண்டும். வைத்திய வசதியும் அப்படித்தான். அரசியல் அதிகாரம் மட்டுமல்ல, அபிவிருத்தியும் அவ்வாறுதான் பரவலாக்கப்பட வேண்டும்.

சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில், வழிகாட்டியாகக் குறிப்பிடத்தக்க நாடாக கனடாவைச் சொல்கிறார்கள். "ஒருவரின் பணம் செலுத்தும் திறனின் அடிப்படையில் அல்லாமல், தேவையின் அடிப்படையில் அவருக்குச் சுகாதாரச் சேவைகள் அளிக்கப்பட வேண்டும்" என்பதுதான் கனடா நாட்டு சுகாதாரத் திட்டத்தின் வழிகாட்டிமுறையாகும்.

மக்களுக்குத் தேவையான அடிப்படைச் சுகாதாரத் தேவைகளை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமை என்பதை யாரும் மறந்துவிட முடியாது. சுகாதாரத் திட்ட முறைகளுக்கான ஐந்து வழிகாட்டிகளை கனடா கொண்டிருக்கிறது.

1. மாகாண மற்றும் எல்லைப் பகுதி அரசுகளின் சுகாதாரத் திட்டங்கள் முறையாகச் செயற்படுத்தப்பட்டு லாப நோக்கு இல்லாத அடிப்படையில் நிர்வகிக்கப்பட வேண்டும்.

2. மாகாணம் மற்றும் எல்லைப் பகுதிகளில் செயற்படும் மருத்துவமனைகள், அங்கு பணிபுரியும் மருத்துவர்கள், அளிக்கப்படும் மருத்துவச் சேவைகள் காப்பீடு செய்யப்பட வேண்டும்.

3. சுகாதாரத் திட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானதாகவும், ஒரே மாதிரியான நிபந்தனைகள் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

4. எந்தவிதமான தடையும் இல்லாமல் மருத்துவமனைகளையும், மருத்துவர்களையும் அணுகும் வகையில் இத்திட்டம் இருக்க வேண்டும்.

5. தகுதியான நபர்கள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்றாலும், அனைவருக்கும் மருத்துவச் சேவை கிடைக்கச் செய்ய வேண்டும். ஒருவேளை வெளிநாடு செல்ல நேர்ந்தால் குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் அவர்களுக்கு மருத்துவச் சேவை அளிக்கப்பட வேண்டும்.

இவற்றை அந்நாடு கறாராகப் பின்பற்றுகிறது. அதனால்தான் சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் அதை முன்மாதிரியான நாடாகக் குறிப்பிடுகிறார்கள்.

கனடாவில் சுகாதாரத் திட்டம் பொது நிதி மூலம் செயற்படுத்தப்படுகிறது. இதனால், பயன்பெறுபவர்கள் எதுவும் தரவேண்டியதில்லை. தனியார் மருத்துவமனைகள் மருத்துவச் சேவை அளிக்கும் பட்சத்தில் அதற்கான தொகையை கனடா அரசே செலுத்திவிடுகிறது. ஒவ்வொரு மாகாணத்திலும் மருத்துவச் சிகிச்சை அளிக்கும் மருத்துவரே காப்பீட்டுத் தொகையை பெறும் விஷயத்தைக் கையாள்கிறார். எனவே, சிகிச்சை பெற்ற நோயாளிகள் இதுபற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

அனைவருக்கும் ஒரே மாதிரியான சிகிச்சை அளிக்கப்படுகிறது. மூத்த குடிமக்களுக்கான மருந்து, மாத்திரை செலவுகளை அரசு ஏற்கிறது. மருந்து, மாத்திரைகள் நியாயமான விலைகளில் கிடைப்பதை அரசே உறுதி செய்கிறது.

உண்மையில், கனடாவின் சுகாதாரத் திட்டம் ஏனைய நாடுகளுக்கு ஒரு சிறந்த முன்னுதாரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

- ஆசிரியர்

# இனவாதத்தை தோற்கடிப்பதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## -ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர்

(கொழும்பு)

ஜெனிவா மாநாடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்ந்து இலங்கையில் இனவாதத்தை தூண்டிவிட எத்தனிப்போரை தோற்கடிப்பதற்கு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்;

யுத்தத்திற்கு பின்னரான இன்றைய காலகட்டம் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு முக்கியமான காலகட்டமாகும். எமது இனப்பிரச்சினைக்கான தீர்வினைப் பெறக்கூடிய இன்றைய சந்தர்ப்பத்தை தவறவிட்டுவிடக் கூடாது. ஜெனிவா பிரச்சினையை முன்னிறுத்தி இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத சக்தியை அரசாங்கத்தில் இருக்கும் சில அமைச்சர்கள் உருவாக்கி வருகிறார்கள். இவர்களது முயற்சியை முறியடிக்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

நல்லிணக்க ஆணைக்குழு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டது. இதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும். அதேபோல் அரசாங்கத்திலிருக்கும் இனவாத அமைச்சர்களின் நடவடிக்கையை கட்டுப்படுத்த வேண்டிய கடப்பாடும் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும். வெறுமனே அமெரிக்க எதிர்ப்பு கோஷங்களாலும், அமெரிக்க பொருட்களை தவிர்க்க சொல்வதாலும் ஜெனிவா பிரச்சினையிலிருந்து அரசாங்கம் மீள முடியாது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும், 13 ஆவது திருத்தத்திற்கு அப்பாற் சென்று இனப்பிரச்சினைத் தீர்வினை காண்பதிலுமே அரசாங்கத்திற்கு பிரச்சினையிலிருந்து வெளிவர முடியும் என்பது உறுதியாகியுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை ஜெனிவா நெருக்கடிக்கும் தமிழ் மக்களின் இனப்பிச்சினை தீர்வுக்கும் உரிய பதிலை யாழ்ப்பாணத்தில் வழங்கவில்லை. தமிழ் மக்களுக்கு ஆதரவளித்து சிங்கள வாக்குகளை இழந்துவிட ஐ.தே.க. விரும்பவில்லை என்பதை நாம் இன்று தெரிந்து கொண்டுள்ளோம.

இந்திய அரசாங்கத்தின் வீடமைப்பு திட்டத்தில் முஸ்லிம் மக்களையும் உள்ளடக்க வேண்டும் என அரசாங்கத்திற்குள்ளும், எதிர்கட்சியிலும் அங்கம் வகிக்கும் அனைத்து வடகிழக்கு, தென்னிலங்கையைச் சேர்ந்த 17 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றுமையாக இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளமையை நாம் பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

# இலங்கைக்கு எதிராக வாக்களிக்க பல்வேறு நாடுகளுக்கும் அழுத்தம்

## பேராசிரியர் ரொஹான் குணரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறு அமெரிக்கா தற்போது பல்வேறு நாடுகளுக்கும் அழுத்தம் கொடுத்து வருவதாக சிங்கப்பூரிலுள்ள அரசியல் வன்முறைகள் மற்றும் பயங்கரவாத விடயங்கள் தொடர்பான சர்வதேச ஆய்வு நிலையத்தின் பேராசிரியர் ரொஹான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை வெற்றிகொள்வதற்கான கடும் பிரயத்தனத்தில் அமெரிக்கா தற்போது ஈடுபட்டுள்ளது.

இதற்கமைய ஆபிரிக்க, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் பலவற்றை இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறு அல்லது நடுநிலை வகிக்குமாறு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில் இலங்கை மிகவும் திறமையான முறையில் நகர்வுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதென பேராசிரியர் ரொஹான் குணரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் போராட்டத்தின் போது இரண்டு தரப்பினருக்கும் வெற்றிவாய்ப்பு உள்ளதால் இலங்கை அரசாங்கம் ஆபிரிக்க, ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடன் தொடர் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடான இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணை காரணமாக கூட்டத்தொடரில் பங்கேற்றுள்ள நாடுகள் குழுக்களாகப் பிரிந்துள்ளது. அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள் ஒரு பிரிவில் இடம்பெற்றுள்ளன. எவ்வாறாயினும் சில நாடுகள் அமெரிக்காவின் மேற்குலக கொள்கைக்கு எதிரான நிலைப்பாட்டினை வகிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழில் கலாசார நிலையம் அமைப்பதற்கு இட ஒதுக்கீடு

## அமைச்சர் ஏக்கநாயக்கா கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கலாசார நிலையங்கள் அமைப்பதற்கு காணிகளை ஒழுங்கு செய்து தருமாறு கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரி.ரி.ஏக்கநாயக்கா யாழ்.மர்வட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகமும் இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்திய ஓவிய, சிற்பக் கண்காட்சிக் கூடத்திற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

யாழ்.மாவட்டத்தில் கலாசார நிலையங்கள் போரின் போது பாதிக்கப்பட்ட நிலையில் தற்போது அவை மிகவும் குறைந்த நிலையில் காணப்படுகின்றது. எனவே கலாசார நிலையங்கள் அமைக்கப்பட்டால் தற்போது நிலை மாறியிருக்கும் கலாசாரத்தினை மேம்படுத்த முடியும்.

எனவே அரசாங்க அதிபர் கலாசார நிலையம் அமைப்பதற்கான சிறந்த காணிகளை ஒழுங்குபடுத்தி தரவேண்டும். அதற்கான நிதியினை வழங்க தயாராக உள்ளோம்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதமின்றி ஒரு தாய் பிள்ளைகள் என்ற ரீதியில் நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதுவே எமது கலாசாரம், கலை, கலாசாரம் போன்றவற்றை நாம் கட்டிக்காக்க உதவும் என்றார். அப்போது எமது கலை, கலாசாரம் அழிவடையாமல் பாதுகாக்க முடியும் என்றார். (எஸ்)

# யாழில் 22 கிராமங்களில் சுனாமி பாசாங்கு ஒத்திகை

(யாழ்ப்பாணம்)

சுனாமிக்கான பாதுகாப்புத்திட்டம் தயாரிக்கும் முகமாக யாழ். மாவட்டத்தில் கரையோரப்பகுதிகளில் சுனாமிப் பாசாங்கு ஒத்திகை நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருவதாக யாழ்.செயலக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதற்கென யாழ்.மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 22 கிராமங்களில் இந்த சுனாமி பாசாங்கு ஒத்திகை நிகழ்வு நடத்தப்பட்டு வருவதாக அவ் அதிகாரி குறிப்பிட்டார்.


இதுவரை வல்வெட்டித்துறை மத்தி, செம்பியன் பற்று வடக்குப்பகுதி ஆகிய இரு கிராமங்களில் இவ் ஒத்திகை நிகழ்வு நிகழ்த்தப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து யூன் மாதத்திற்கு இடையில் ஏனைய இடங்களில் இவ் ஒத்திகை நிகழ்வுகளை நடத்தி முடிக்கத் திட்டமிட்டப்பட்டிருப்புதாகவும் தெரியவருகிறது.

மருதங்கேணி, கரவெட்டி, பருத்தித்துறை, மணற்காடு போன்ற கிராமங்கள் இவற்றில் அடங்குகின்றன. இவ்வா றான ஒத்திகை நிகழ்வுகளில் பாதுகாப்புப் படையினர் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச உத்தியோகத்தர்கள், சமூகமட்ட அமைப்புக்கள் என்பன பொதுமக்களுடன் இணைந்து இந்த ஒத்திகை நிகழ்வுகளில் பங்கேற்க வருகின்றன. (பா)

# மக்களுடைய பங்களிப்புகள் இல்லாது அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாது

## ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



(யாழ்ப்பாணம்)

மக்களது பங்களிப்பின்றி அபிவிருத்தி நடவடிக்கைகளை இலகுவில் முன்னெடுத்துச் செல்ல முடியாது என ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தீவக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு காந்தி சனசமூக நிலையமும் விளையாட்டு கழகமும் இணைந்து நடத்திய கலை விழா நிகழ்வுகள் செ.உதயகுமார தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தீவகப் பிரதேசங்கள் பரந்ததொரு பிரதேசமாக காணப்படினும் மக்கள் செறிந்து வாழ்கின்ற எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. இதனால் வீதி மற்றும் மின் விநியோக நடவடிக்கைகளின் போது பாரிய இடையூறுகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

குறிப்பாக மின்விநியோக நடவடிக்கைகளின் போது பிரதேசத்தின் மக்கள் பரம்பல் செறிவாக இருக்க வேண்டும். ஆனால் இப்பிரதேசத்தில் மக்களது எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. இருப்பினும் இப்பிரதேசத்திற்கான மின்விநியோகத்தை துரித கதியில் மேற்கொள்ள நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

குப்பி விளக்குகளில் கல்வி கற்கின்ற மாணவர்களின் கல்வி நிலையை மேம்பாடடையச் செய்ய நாம் மின் ஒளியினூடாக ஒளியூட்டுவோம். தென்மராட்சிப் பிரதேசத்தில் ஐந்து தலைமுறைகளுக்கும் மேலாக மின்சாரத்தைப் பெற்றிராத கிராமங்களுக்கு கூட நாம் மின்விநியோகத்தை வழங்கியிருந்தோம்.

மாணவர்கள் சமாதானமானதும் அமைதியானதுமான சூழலில் கல்வியைத் தொடரக் கூடிய ஓர் சூழல் இன்று உருவாகியுள்ளது. இந்நிலையில் சில சமூக விரோதிகளால் மாணவர்கள் மீதான துஷ்பிரயோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே கல்வி கற்கின்ற மாணவர்களைப் பாதுகாத்து கொண்டு அவர்களது கல்வியை மேம்பாடடையச் செய்கின்ற பாரிய பொறுப்பு பெற்றோருக்கே உள்ளது. ஏனைய பிரதேசங்களைப் போல் இப்பிரதேசங்களையும் மாற்றியமைத்து சிறந்ததொரு எதிர்காலத்தை பெற்றுத் தருவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துரைகளை ஈ.பி.டி.பி.யின் வேலணை பிரதேச இணைப்பாளரும் வேலணை பிரதேச சபைத் தவிசாளருமான சின்னையா சிவராசா (போல்), வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் தயானந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து மாணவர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி புங்குடுதீவு பிரதேச இணைப்பாளர் ஐ.சிவநேசன் (நவம்), சமூக சேவையாளர் தாட்சாயினி மற்றும் கிராமப் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பஜனை மண்டப திறப்பு விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீருற்று பிரதேசத்திலுள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலைய பிரேமசாயி பஜனை மண்டபத் திறப்பு விழா எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சேவா நிலையத் தலைவர் ஸ்ரீ.சி.இரகுநாதபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஸ்ரீ சத்தியசாயி மத்திய அறக்கட்டளையின் தலைவரும் இலங்கையின் மொறிசியஸ் நாட்டுக்கான உயர்ஸ்தானிகருமான தெ.ஈஸ்வரன் பிரதம விருந்தினராகவும், வைத்திய கலாநிதி வி.ஜெகநாதன், ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ச.கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட செயலக உத்தியோகத்தர் திருமதி ஆரணி தவபாலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (04)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வடக்கு மத்திய வைத்திய சாலை (Northern Central Hospital) 342, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குப் புதிதாக திறந்து வைக்கப்படவுள்ளது.

# பருத்தித்துறை கோட்டமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித் தினப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இப்போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதன் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் கோட்டக் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

**பேச்சு - பிரிவு - 1**

இ.விதுஷன் - தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை, ஜெ.சர்மினி - யாழ்.வடஇந்து மகளிர் கல்லூரி, வா.சாகித்தியா - மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்.

**பிரிவு - 11**

சி.தர்சனா - புற்றளை ம.வி, சா.ஷிந்தியா - யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, சி.ரமணன் - ஹாட்லிக் கல்லூரி.

**பிரிவு - III**

ந.துவாரகா - யாழ்.வடஇந்து மகளிர் கல்லூரி, சி.நிருசாந் - ஹாட்லிக் கல்லூரி, கு.திருவாயினி -பொலிகண்டி இ.த.க.பா.

**பிரிவு - 1V**

மு.பாவலன் - ஹாட்லிக் கல்லூரி, இ.திவாகர் - சிதம்பராக் கல்லூரி, மு.வெண்ணிலா - யாழ்.வடஇந்து மகளிர் கல்லூரி.

**பிரிவு - V**

கு.விஜிதா - வல்வை மகளிர் வித்தியாலயம், மு.பிரசாந்திகா - தொண்டைமானாறு ம.வி, இ.டிசாந்தினி - சிதம்பராக் கல்லூரி.

**வாசிப்பு - பிரிவு 1**

நி.நிருபா - யாழ்.வடஇந்து மகளிர் கல்லூரி, ஆ.துஷாந்தினி - புற்றளை ம.வி, வா.அனுஜா - தம்பசிட்டி மெ.மி.த.க.பா.

**பிரிவு - 11**

வா.ஜெயமிதிலா - யாழ்.வட இந்து மகளிர் கல்லூரி, இ.குருபரன் - ஹாட்லிக் கல்லூரி, சி.வைஷ்ணவி - யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. (109) (தொடரும்)

# கைத்தொலைபேசி வாங்கச் சென்றவர் தனது ஆவணங்களை இழந்தார்

(திருநெல்வேலி)

கைத்தொலைபேசி ஒன்றை வாங்குவதற்காகச் சென்ற ஒருவர் பணத்துடன் தனது ஆவணங்களையும் தவறவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கல்வியங்காடு பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைத்தொலைபேசியை வாங்குவதற்காக இந்நபர் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றுக்குச் சென்றார். தொலைபேசியைக் கொள்வனவு செய்துவிட்டு அதற்குரிய பணத்தைத் தனது பேஸிலிருந்து எடுத்துக் கொடுத்தார். பேர்ஸினைப் பக்கத்திலுள்ள மேசையில் வைத்துவிட்டுத் தொலைபேசி நல்லபடியாக இயங்குகிறதா எனப் பரீட்சித்துப் பார்த்தார்.

பின்னர் வீட்டுக்குச் சென்றுவிட்டார். சில நிமிட நேரத்தின் பின்னரே பேர்ஸின் ஞாபகம் அவருக்கு வந்தது. படபடப்புடன் விற்பனை நிலையத்துக்கு விரைந்து வந்த அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. வைத்த இடத்தில் பேர்ஸ் காணப்படவில்லை. எவரோ அதனை எடுத்துச் சென்றிருந்தார்கள்.

காணாமற்போன அந்தப் பேர்ஸிற்குள் அவரது அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், நாலாயிரம் ரூபா பணம் போன்றவை இருந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் மாபெரும் மருத்துவக் கண்காட்சி

(அச்சுவேலி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தினரால் ஒழுங்கமைத்து நடத்தப்படவுள்ள மாபெரும மருத்துவக் கண்காட்சி எதிர்வரும் மே மாதம் 14ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து ஆறு தினங்கள் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டு பயன பெறத்தக்க வகையில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இக்கண்காட்சி நடைபெறும் தினங்களில் குறித்த ஓர் தினத்தையும், நேரத்தையும் அதில் பங்கு பற்றும் மாணவர் தொகையினையும் தமக்கு ஏற்றவகையில் பாடசாலைகள் தெரிவு செய்து அது பற்றிய தகவலை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கிடையில் கண்காட்சிக் குழுவிற்கு அனுப்பிவைக்கும்படி பாடசாலைகள் கேட்கப்பட்டுள்ளன.

இதில் பங்குபற்றும் மாணவர்களுக்கு நுழைவுக் கட்டணமாக 20 ரூபா அறவிடப்படும். தரம் 10 மற்றும் அதற்கு மேற்பட்ட வகுபபுகளைச் சேர்ந்த மாணவர் கள் இதில் பங்குபற்ற முடியும் எனவும், மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடன் கலந்துகொள்ள வேணடும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (03)

# பகல் பராமரிப்பு நிலையம் வியாழக்கிழமை திறந்துவைப்பு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை பகல் பராமரிப்பு நிலையத்தின் திறப்பு விழா நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 10 மணிக்கு பகல பராமரிப்பு நிலையத் தலைவர் அ.கீதபொன்கலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி ஈஸ்வரராஜா, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் க.முரளிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன், கைதடி வயோதிபர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சமூக சேவைத் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் ஆ.ஞானவேல், யாழ். மாவட்ட முதியோர் பேரவை உப தலைவர் லயன் எஸ்.யோகாநந்தராஜா, சமூக சேவை உத்தியோகத்தர்களான வே.அருந்தவராசா, ச.புரட்சிதாஸன், முதியோர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி பாலகுமாரி, மானிப்பாய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் ரஞ்சித், மானிப்பாய் இராணுவ முகாம் கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஜே.கே.ஜே.ஜெயரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ள னர். (104)

## பொதுக் கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.அருந்தவபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொண்டு புதிய நிர்வாக சபையைத் தெரிவு செய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு அபிவிருத்திச் சங்கச் செயலாளர் க.விஜயவாசன் அறிவித்துள்ளார். (11)

# வலயப் பாடசாலைகளுக்கான விஞ்ஞான ஆய்வுகூடப் போட்டி

(அச்சுவேலி)

யாழ்.வலய பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞான ஆய்வு கூடப் போட்டிகள் மற்றும் மாணவர் ஆக்கத் திறன்போட்டி, புத்தாக்கப் போட்டிகள் போன்றவற்றை இம்முறையும் நடத்துவதற்கு வலய மட்ட விஞ்ஞானப் பிரிவினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆய்வுகூடப் போட்டிகளின் போது பாடசாலைகளின் வகைக் கேற்ப நடத்தப்பட்ட இப்போட்டியில் ஆய்வுகூட ஒழுங்கமைப்பு, ஆய்வுகூடச் சுத்தம், ஆய்வுகூட அமைப்பு, செயற்பாடுகள் என்ற அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறவுள்ளன.

மேலும் மாணவர்களின் ஆற்றல்களையும், திறன்களையும் வெளிக் கொணரும் வகையில் ஆக்கத்திறன் போட்டிகள் மற்றும் புத்தாக்கப் போட்டிகளை நடத்தி அவர்களுக்கு கோட்டமட்டம் மற்றும் வலய மட்டத்தில் பரிசில்கள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (03)

# ஆசிரிய உதவியாளர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர்

(நெல்லியடி)

வடமாகாணத்தில் உதவி ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்க வேண்டும் என இலங்கை ஆசிரிய சங்க பொதுசெயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்; கடந்த வருடம் இலங்கையில் பல்வேறு மாகாணங்களிலும் உதவித் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றியவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டது. அதன் பின்னர் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைய வடமேல் மாகாணங்களில் இவர்களின் தற்போதைய கல்வித்தகைமைகளிற்கேற்ப 3 I, 3 II பிரிவுகளில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் வடமாகாணத்தில் இந்த நியமனங்கள் வழங்கப்படவில்லை. தற்போதும் இந்த ஆசிரியர்கள் குறைந்த சம்பளத்துடனேயே கடமையாற்றுகின்றனர்.

இலங்கையில் வேறுபட்ட நிலைகளில் நியமனங்கள் வழங்கப்படுவதற்கும் சில மாகாணங்கள் நன்மை பெறுவதையும், சில மாகாணங்கள் பாதிப்படைவதையும் நாம் பொறுத்துக் கொள்ள மாட்டோம். ஏனைய மாகாணங்களைப் போன்று வட மாகாண உதவி ஆசிரியர்களுக்கு அவர்களின் கல்வித்தகைமைக்கேற்ப புதிய நியமனங்கள் வழங்கப்படுவதற்கு கல்வி அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித் துள்ளார். (12)

# அச்சுவேலி பஸ்நிலையப் பகுதியில் புதிய வடிகால் தொகுதி அமைப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் மத்திய பஸ் நிலையப் பகுதி மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையப்பகுதிகளில் புதிய வடிகால் அமைப்புத் தொகுதிகள் நிறுவும் பணிகள் இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அச்சுவேலி பஸ்நிலையப் பகுதியில் மழைகாலங்களில் நீர் வழிந்தோட முடியாது தேங்கி நிற்பதால் அப்பகுதியால் செல்லும் பொதுமக்கள், மாணவர்கள், மற்றும் வாகனச்சாரதிகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே அப்பகுதியூடாக பயணம் செய்து வரும் நிலை காணப்பட்டது.

பொதுமக்கள் நீண்டகாலமாக எடுத்துவந்த கடும் பிரயத்தனத்திற்கு பின்னர் சம்பந்தப்பட்டவர்களால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் வடிகால் அமைப்புத்தொகுதிகள் புதிதாக நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் எதிர்காலத்தில் இதனால் பலரும் பெரும் நன்மை அடைவர் எனவும் தெரிவிக்கின்றது. (03)

# சர்வமத ஒன்றியத்தின் கருத்தாடல் பகிர்வு

(முல்லைத்தீவு)

அகில இலங்கை ரீதியில் சர்வமத நல்லிணக்கத்திற்கான வடக்கு கிழக்கு சர்வமத ஒன்றி யத்தின் கருத்தாடல் பகிர்வு நேற்று முன்தினம் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் நடைபெற்றது.

இவ்வாண்டுக்கான இந்த நிகழ்வு அன்றைய தினம் காலை 10 மணி முதல் 2 மணி வரை நடைபெற்றது. சமூகம் மற்றும் மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி நீடித்து நிலைக்கக் கூடிய சமாதானத்தை ஏற்படுத்தும் முகமாக நடத்தப்பட்ட இந்நிகழ்வில் மதத்தலைவர்கள், சமூகத்தலைவர்கள், மனித உரிமை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (04)

# பல்லவராயன்கட்டு வைத்தியசாலையை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பல்லவராயன்கட்டு ஆயுரவேத வைத்தியசாலை மருத்துவர்கள் இன்மையால் தொடர்ந்து மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் வைத்தியசாலையில் இதுவரை மருத்துவர்கள் ஒருவரும் நியமிக்கப்படாத நிலையில் மூடப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியிலுள்ள மக்கள் வைத்திய சேவைகளைப பெற்றுக்கொள்ள முடியாத் நிலை காணப்படுகின்றது. தூர இடங்களில் உள்ள வைத்திய சாலைகளில் குறிப்பாக கிளிநொச்சி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் இதனால் தமது பணமும் நேரமும் விரயமாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

சிறு நோய்களுக்குக் கூட தூர இடங்களுக்குச் சென்றே சிகிச்சை பெறவேண்டியுள்ளதாகவும் இவ் ஆயுர்வேத வைத்தியசாலை திறக்கப்பட்டால மக்கள் வைத்திய தேவைகளை இதனூடாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் எனவும், இதற்கு சம்பந்தபட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

# வெய்யில் குளிக்கும் வாகனங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு சொந்தமான பாரவூர்தி மற்றும் இரு குடிநீர பௌசருடனான உழவியந்திரங்கள் என்பன வெய்யிலில் தரித்து நிற்பதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசசபையின் வளாகத்தில் வாகனங்களை நிறுத்துவதற்குரிய தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டபோதிலும் இவ்வாகனங்கள் வெளியில் சென்று பின்னர் இங்குவந்து வெய்யிலில் தரித்து விடப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் இவ்வாகனங்களை உரிய தரிப்பிடத்தில் தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய அருங்கலைகள் பேரவையின் மாகாண மற்றும் தேசிய மட்ட கைவினை கண்காட சியினை முன்னிட்டு யாழ்.மாவட்ட கைவினையாளர்களுக்கான விஷேட செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பன்னவேலை, தோற்பொருள் உற்பத்தி, சிலை வடிவமைப்பு, வார்ப்புச்சிற்பங்கள், சிற்பச்செதுக்கல்கள், தையல் வடிவமைப்பு போன்ற துறைகளின் கைவினையாளர்கள் மற்றும் ஏனைய கைவினையாளர்களையும் இதில் பங்குபற்றுமாறும் இச்செயலமர்வின் நிறைவில் கைவினையாளர்களைப் பதிவு செய்தல் நிகழ்வும இடம் பெறும் என பேரவையின் யாழ். மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் க.நவதர்சன் அறிவித்துள்ளார்.

# உப்புவெளி கிராமத்தில் சுனாமி ஒத்திகை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 591ஆவது படைப்பிரிவும், அனர்த்த முகாமைத்துவப்பிரிவும் இணைந்து கடந்த வாரம் சுனாமி ஒத்திகை நிகழ்வொன்றை நடத்தியது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரிவில் உள்ள உப்புவெளி கிராமத்தில் இவ் ஒத்திகை இடம்பெற்றது.

எதிர்காலத்தில் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டால் அவற்றிலிருந்து மக்கள் எவ்வாறு தம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்ற வகையில் அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரும், இராணுவத்தினரும் மக்களுக்கு ஒத்திகை நிகழ்வை நடத்தி அது தொடர்பான கருத்துக்களையும் வழங்கினர்.

இச்செயற்பாட்டில் இக்கிராமத்தில் 300 குடும்பங்கள் கலந்து கொண்டதாகவும், மேலும் இம்மாவட்டத்தில் கரையோர பிரதேசங்களில் இச் செயற் பாடுகள் இடம்பெறவுள்ளதாகவும் முல்லை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் றீட் நித்தியானந்த குலாஸ் தெரிவித்துள்ளார். (04)


## முரசின் இன்றைய பலன்

(20.03.2012 - செவ்வாய்க்கிழமை)

கர வருஷம் பங்குனி மாதம் 07 ஆம் திகதி. திரயோதசி முன்னிரவு 6.53 வரை.
நட்சத்திரம் அவிட்டம், சித்தயோகம் முற்பகல் 8.12 வரை. பிரதோஷ விரதம்
இராகுகாலம் 3.17 - 4.47 வரை. சுபநேரம் 10.47 - 12.17 வரை.
எமகண்டம் 9.17 -10.47 வரை. குளிகை காலம் 12.17 - 1.47 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனவுறுதி, வெளிநாட்டு வாய்ப்பு, அந்நியரால் உதவி, சகோதரரால் உதவி. |
| ரிஷபம் | பெருமை, வெளிநாடு செல்ல வாய்ப்பு, நிலுவைகள் கிடைக்கும், அரச உதவி. |
| மிதுனம் | தனவரவு, வேலைப்பளு அதிகரிப்பு, எதிர் பாராத இடமாற்றம், மாமன் மாமி அனுசரனை. |
| கடகம் | கவனம்தேவை, காரியானுகூலம், குடும்பத்தில், இணக்கநிலை, பிரயாணத்தில் வெற்றி. |
| சிம்மம் | மனச்சஞ்சலம், புத்திரரால் யோகம், பொன் பொருள் சேரும், குடும்பத்தில் இணக்கம். |
| கன்னி | பெண்களால் தொல்லை, வேலைப்பளு அதிகரிக்கும், சொத்துக்கள் சேரும், திருமணம்நிறைவேறும் |
| துலாம் | வாகன சுகம், தடைப்பட்டவை நிறைவேறும், பணப்பரிமாற்றத்தில்கவனம், பயண அலைச்சல் |
| விருச்சிகம் | புதிய தகவல், அதிகாரிகள் உதவி, அகால போசனம், ஆசைகள் நிறைவேறும். |
| தனுசு | குடும்ப வளம், தெய்வானுகூலம், உறவினரால் நன்மைகள், பணப்பரிமாற்றத்தில் சிக்கல். |
| மகரம் | கோபப்படல், செலவில் சிக்கனம் அவசியம், நிதானம், தைரியம் வேண்டும், குடும்பப்பிரிவு. |
| கும்பம் | தடங்கல் வரலாம், குடும்பத்தில் வாக்கு வாதம், உறவினர் ஆதரவு, சிறு மருத்துவச் செலவுகள். |
| மீனம் | உதவிகள் கிடைக்கும், நிம்மதிக்குறைவு, வாகனங்களால் செலவு, சுபகாரியங்கள். |


# வெல்டிங் தயாரிப்புக்கள் யாழில்.பயிற்சிப் பட்டறை



(யாழ்ப்பாணம்)

வடமாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளில் முக்கிய பங்களிப்பு வழங்கும் யு.ரி.ஈ நிறுவனத்தினால் சிக்வெல்ட் வெல்டிங் தயாரிப்புக்கள் குறித்து வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்களுக்கான பயிற்சிப் பட்டறையொன்று கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்டுள்ளது.

யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடைபெற்ற இப் பயிற்சிப்பட்டறையில் வடமாகாணத்தைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும், நிறுவனங்களும் இதில் பங்குபற்றின. யாழ்.குடாநாட்டில் தனது விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஒரு அங்கமாகவே இந் நிறுவனத்தால் இப்பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ப்ரியாத் பெர்ணான்டோ வெல்டிங் தயாரிப்புக்கள் குறித்து விளக்கமளித்தார். இதன்போது அவர் தெரிவிக்கையில்; வடக்கு மாகாணததைப் பொறுத்தமட்டில் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தை தொடர்ந்து துரித வளர்ச்சி கண்டுவருகிறது.

இதில் பல்வேறு வகையான அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், வெல்டிங தயாரிப்புக்களுக்கான கேள்வியும் அதிகளவு காணப்படுகின்றது. இதனை அடுத்தே வெல்டிங் தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

அத்துடன் வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்களுக்கு இதன் அறிவுறுத்தல் மூலம் நவீன தொழில் நுட்பத்தை இலங்கையில் நடைமுறைப் படுத்தக்கூடியதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.(எஸ்)



**இ**ன்றைய பொதுக் களத்தில் அந்தஸ்தான ஒரு பொய்யாக உலாவருவது அமெரிக்காவின் தீர்மானம் தீங்கற்றதும், மற்றும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாகவும் உள்ளது என்கிற கருத்தே.

ஏனெனில் அத்தீர்மானம் இலங்கை அரசாங்கத்தின் சொந்தத் தயாரிப்பான எல்.எல்.ஆர்.சி.யின் அறிக்கையினை ஒரு நியாயமான கால அவகாசத்துக்குள்

# அமெரிக்கத் தீர்மானம் தீங்கற்றதோ ஏற்றுக் கொள்ளத் தக்கதோ அல்ல

அமுல்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்ளும்படி, இலங்கை அரசாங்கத்தை வேண்டுகிறது. இந்த அப்பட்டமான பொய், ஆதிக்க சக்திகளான ஐ.தே.க., ரி.என்.ஏ. மற்றும் உள்நாட்டு சமூகத்தைச் சேர்ந்த கருத்தியலாளர்கள் என்பனவற்றால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இந்த வலியுறுத்தலின் போலித் தனத்தை, அந்தத் தீர்மானத்தை மேலோட்டமாகப் பார்க்கும் ஒரு வெறும் பார்வையின் மூலமே நிரூபிக்கக் கூடியதாக உள்ளது. எல்.எல்.ஆர்.சியின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்காக வெறுமனே செயல்படுத்தல்களைத் தேடுவதும், விவாதிக்கக் கூடியதும், பாதிப்பற்றதுமான, ஆக்கபூர்வமான நாட்டத்தின் எல்லைகளைக் கடந்து வெகுதூரம் முன்னேறி, அந்தத் தீர்மானம் எல்.எல். ஆர்.சி.யினையே விமர்சிக்கிறது.

அமெரிக்காவின் தீர்மானத்தின் ஐந்தாவது மற்றும் கடைசிப் பந்தியில் அமைந்துள்ள முகவுரை, உடனடியாக நடைமுறைப்படுத்தும்படியான அதன் செயற்பாட்டு உட்பிரிவுகள் குறிப்பிடுவது "எல்.எல்.ஆர்.சி அறிக்கை சர்வதேச விதிகள் மீறப்பட்டுள்ளதாக எழுந்துள்ள தீவிரமான குற்றச்சாட்டுகளுக்கு போதியளவு பரிகாரங்களை விதந்துரைக்கவில்லை என்பதை கவலையுடன் குறிப்பிட வேண்டும்....."

சாதாரண பார்வையில் அந்தச் சொற்களை நோக்கும்போது, அந்த வசனத்தில் மறைந்துள்ள அமெரிகக தீர்மானத்துக்கு சார்பான அரசியல்வாதிகள், மற்றும் கருத்து கூறுபவர்களின் அவமதிப்பான உள்நோக்கத்தை புரிந்துகொள்ள முடியும். எனினும் அதிலுள்ள ஒரு விடயம் அது நடுநிலையை கடைப்பிடிக்காமல் அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கிறது.

எனவே அமெரிக்காவின் தீர்மானத்தில் வெளிப்படையாகத் தெரிவது அது குப்பைகளை கூட்டி ஒதுக்கி அதன்மேல் கம்பளத்தை விரித்து மறைத்து வைத்திருப்பதை போன்ற ஒரு தோற்றத்தையே. எனவே அத் தீர்மானத்துக்கு ஒரு ஆதரவாளனாக இருப்பதைக்காட்டிலும் மோசமானது வேறொன்றுமில்லை.

அமெரிக்காவின் தீர்மானம் எல்.எல்.ஆர்.சியின் பரிந்துரைகளுக்கு அப்பால் அதன் செயற்பாட்டின் உட்பிரிவுகளை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளுக்குச் செல்கிறது.

(1) எல்.எல்.ஆர்.சி அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் படியும், அது தொடர்பான உரிய சட்டபூர்வ கடப்பாடுகளையும், மற்றும் நீதி, சமத்துவம், பொறுப்புக் கூறும் கடப்பாடு, மற்றும் சகல இலங்கை வாசிகளிடையேயும் நல்லிணக்கம், போன்றவற்றை உறுதிப்படுத்தும் விதத்தில் நம்பிக்கையான



**– தயான் ஜயதிலக**

சுயாதீனமா்ன நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

(2) எல்.எல்.ஆர்.சி.யின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கும் மற்றும் சர்வதேச விதிகள் மீறப்பட்டுள்ளன என எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு தீர்வுகாண்பதற்கும், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள மற்றும் எடுக்கப்போகிற சாத்தியமான நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு விரிவான விளக்கமுள்ள செயல் திட்டத்தை, சமர்ப்பிக்கும்படி இலங்கை அரசாங்கம் வேண்டப்படுகிறது.

இது அமெரிக்காவின் தீர்மானம், எல்.எல்.ஆர்.சியின் (பாதகமற்ற) பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை வலியுறுத்துவதற்கான வழிகளைத் தேடுகிறது என்ற ஒரு பொய்யினை சர்வசாதாரணமாக வெளிப்படுத்துகிறது. மேலதிக நடவடிக்கைகள், நல்லதும் அவசிய மானதும் என வாதிடுவதை அனுமதிக்கலாம், ஆனால் வெளியார்களின் தலையீடு என்கிற புகைமூட்டத்தை வழங்குவதற்கு முயற்சிப்பது, ஏமாற்றுக்கார ஒரு முதலீட்டு திட்டத்தில் வாடிக்கையாளர்களை சேர்ப்பதற்கு கூறப்படும் ஆசை வார்த்தைகளைப்போல, இந்த விடயத்தில் பங்குபற்றும்படி இலங்கைப் பிரஜைகளிடம் கேட்பது போலிருக்கும்.

மூன்றாவதும் இறுதியுமான அமெரிக்காவின் தீர்மானத்தின் செயற்பாட்டு உட்பிரிவு கூறுவது:


(3) "அந்த நடவடிக்கைகள் மற்றும் கோரிக்கைகளை செயல்படுத்த விசேட விதிமுறைகளை வழங்கும்படி மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்தினை ஊக்குவிப்பதோடு, இலங்கை அரசாங்கம் அதன் ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை ஏற்று நடைமுறைப்படுத்தும்படி கேட்கப்படுகிறது. அத்தகைய உதவிகளின் பங்கினைப்பற்றி ஐநா மனித உரிமைச் சபையின் வருகின்ற 22 ஆவது அமர்வில் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகம் ஒரு அறிக்கையினை சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுகிறது"

இதனை வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அமெரக்கா வேண்டுகோள் விடுத்துள்ள "எல்.எல்.ஆர.சி அறிக்கையில் கூறப்பட்டுள்ள ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தும்படியும், அது தொடர்பான உரிய சட்டபூர்வ கடப்பாடுகளையும், மற்றும் நீதி, சமதத்துவம், பொறுப்புக்கூறும் கடப்பாடு, மற்றும் சகல இலங்கை வாசிகளிடையேயும் நல்லிணக்கம் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு நம்பிக்கையுள்ள சுயாதீன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்...." என்பதன்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகளிலும், அதேபோல அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் மனித உரிமைகள் உயர் ஆணையாளர், ஒரு கண்காணிப்பு அதிகாரியாக மாறிவிடுகிறார்.

இது தேசிய நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களில் ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளர். அலுவலகம் ஒரு மேற்பார்வையாளர் பதவியினைத் தேடுவதற்கு வழியமைக்கிறது. அமெரிக்காவின் தீர்மானம் மூலமாக, இலங்கையில் அரசியல், மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் செயல்முறைகள் என்பனவற்றை தனது செயற்பாடுகள் மற்றும் விதிகள், வழியாக மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகம் மாற்றியமைக்கிறது.

அதாவது மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகம் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு பொறுப்புக் கூறவேண்டிய ஒரு மேலதிக தேசிய நிறுவனமல்ல, ஆனால் பிரதானமாக நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பொறுப்பிலுள்ளது.

# வியக்க வைக்கும் துபாய்!



**வெ**றும் பாலைவனமாகக் காட்சியளித்த துபாய், எண்ணெய் வளத்தால் வளர்ச்சி அடைந்து கடந்த 50, 60 ஆண்டுகளில் பல்வேறு நாட்டுத தொழிலாளர்களின் உழைப்பால் சோலைவனமாகத் திகழ்கிறது!

அபுதாபி சாலையின் இருபுறமும் 20, 30 மாடிகள் கொண்ட உயர்ந்த கட்டடங்கள், வணிக வளாகங்கள், அகலமான தூய்மையான சாலைகள், மேம்பாலங்கள், அறிவிப்பு வளைவுகள், நிறைய விளம்பரப் பலகைகள் வியக்க வைக்கின்றன.

கடலுக்கு அடியில் இரண்டு தளங்கள் கொண்ட ஏழு நட்சத்திர ஹோட்டல். இது உலகிலேயே மிகப்பெரிய ஹோட்டல்களில் ஒன்று. பெரிய நவீன வசதிகள் கொண்ட அறைகளின் ஒருநாள் வாடகை ரூபா ஒரு இலட்சம் முதல் இரண்டரை இலடசம் வரை ஆகும். இங்கு காலை உணவுச் செலவு மட்டும் ரூபா 12 ஆயிரம் அபுதாபியில் உள்ள மிகப்பெரிய மசூதி. உலகிலுள்ள மிகப் பெரிய மசூதிகளில் எட்டாவது இடத்திலுள்ளது. "மரினா மால்" உலகில் முக்கியமான மிகப் பெரிய வணிக வளாகம். துபாய் நகரின் நடுவில் ஓடும் "கிரிக்" கால்வாயில் படகில் சவாரி செய்து, எதிர்க்கரையை அடைந்தால் பிரமிக்க வைக்கும் பல்வேறு கடைத்தெருக்களைப் பார்க்கலாம்.

ஜுமேரா கடற்கரைக்கு எதிரே மிகப்பெரிய "பர்ஜ் அல் அராப்" என்ற ஏழு நட்சத்திர ஆடம்பர ஹோட்டல். 1053 அடி உயரமுள்ள இந்த ஹோட்டல் உலகிலேயே நான்காவது உயரமான ஹோட்டல் என்று கூறப்படுகிறது.

பனை மர வடிவில் அமைந்துள்ள பாம் தீவுகள், துபாய் மன்னரின் அரண்மனை, "பன்னாட்டுக் கிராமக் கண்காட்சி" போன்றவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்பவை.

பெரிய பாலைவனம் மாற்றப்பட்டு 42 பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கடை வளாகங்கள் இங்கு உள்ளன. வருடத்தில் 116 நாட்கள் இந்தக் கண்காட்சி நடைபெறும்.

"துபாய் மால்" என்ற மிகப் பெரிய கடை வளாகத்தில் "பர்ஜ் துபாய்" என்ற உலகின் மிக உயர்ந்த கோபுரம் உள்ளது. 2716 அடி உயரமும் 124 மாடிகளும் கொண்ட இக்கோபுரத்தை பலகோடி டொலர்கள் செலவு 2004 முதல் 2010 வரை கட்டி முடித்தார் இந்நாட்டு மன்னர்.

கோபுரத்தின் நுழைவாயிலில் துபாய் மன்னரின் படத்துடன், "முடியாது என்னும் வார்த்தை தலைவர்களின் அகராதியில் இல்லை" என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது.

# தொடர்கிறது கூட்டமைப்பின் உட்போர்!



**"சுமந்திரன் மீது பழிசுமத்தாதீர்கள் மன்னாரில் மாவை இறைஞ்சல்!"**

மேற்படி தலைப்பில் தமிழரசுக் கட்சியினரைத் தாக்கி சுரேஷ் சார்பு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராக ஊடகங்களை வழிநடத்துபவரைத் தெரியும் என்றும் அவர் பேச்சைக் கேட்க வேண்டாம் என்றும் மன்னார் தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் அதன் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். இதை சுரேஷ்க்கு எதிரான மாவையின் கண்டனம் என எடுத்துக்கொண்டு அந்தக் கூட்டச் செய்தியை எழுதியிருக்கிறது சுரேஷ் சார்பு இணையத் தளம். அது எழுதியுள்ள செய்தி வருமாறு:

ஜெனிவா விவகாரத்தினைக் கையிலெடுத்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமையினை இல்லாமல் செய்யும் நடவடிக்கையில் இணையத்தளங்களும், உள்ளூர் ஊடகங்களும் செயற்பட்டு வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.



மன்னார் நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் நடைபெற்ற "கூட்டமைப்பு ஏன் ஜெனிவா செல்லவில்லை" என்ற தொனிப்பொருளிலான கருத்தூட்டல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சில மணி நேரமாக தொடர்ந்து உரையாற்றிய மாவை சேனாதிராசா பிரதேச சபை உறுப்பினர்கள் கேள்வி கேட்பதறகு சந்தர்ப்பம் வழங்காது நீண்ட உரையாற்றியிருக்கின்றார்.

அவர் தனது உரையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவா செல்லாமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. வெளிநாடுகளில் நூறு இணையத் தளங்கள் செயற்படுகின்றன. அவை தமக்கு தெரிந்த வகையில் செய்திகளை வெளியிடுகின்றன. அவற்றினை நம்பி உள்ளூர் ஊடகங்களும் செய்திகளையும், கட்டுரைகளையும் எழுதி வருகின்றன.

உண்மையில் ஒரு கட்சியின் தலைவருக்கு முடிவெடுக்கின்ற அதிகாரம் இருக்கின்றது. அந்த வகையிலேயே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜெனிவா தொடர்பிலான முடிவினை எடுத்தார். ஏனையவர்கள் தெரிவிப்பது போன்று சுமந்திரன் இந்த முடிவினை எடுக்கவில்லை. கூட்டமைப்பின் தலைவர் எடுத்த முடிவினையே சுமந்திரன் வெளியே அறிவித்தார்.

உண்மையில் சுமந்திரன் மிகத் திறமை வாய்ந்தவர். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருப்பது கூட்டமைப்பிற்கு பெரும் வரப்பிரசாதம் ஆகும் என்று தெரிவித்த மாவை சேனாதிராசா, ஜெனிவாவிற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செல்வதனால் ஒன்றையும் சாதித்துவிடப் போவதில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இராஜதந்திர அடிப்படையிலேயே கூட்டமைப்பின் தலைவர் ஜெனிவா தொடர்பிலான தீர்மானத்தை எடுத்தார். ஒரு கட்சியின் தலைவருக்கு முடிவெடுக்கின்ற அதிகாரம் இருக்கும். அதனையே அவர் செய்தார். கிரிக்கெட் அணி ஒன்றை எடுத்துக் கொண்டால் அதன் தலைவரே போட்டி தொடர்பிலான முடிவுகளை எடுப்பார். அதேபோன்றுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் முடிவினை எடுத்தார்.

ஊடகங்கள் ஜெனிவா விவகாரத்தினை கையிலெடுத்துக்கொண்டு கூட்டமைப்பின் தலைமைக்கு எதிராக எழுதுகின்றன. தலைமையை இல்லாமல் செய்வதன் மூலம் எதனையும் சாதித்து விட முடியாது. இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்று தமக்குத் தெரியும் என்றும் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். மன்னார் நகர மற்றும் பிரதேச சபைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் 25 இற்கும் மேற்பட்டோர் உள்ள போதிலும் 15 பேர் மட்டுமே இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

மாவை சேனாதிராசா உரையாற்றத் தொடங்கியதில் இருந்து நிகழ்வு முடியும் வரையில் உரையாற்றியதாகவும் எவரும் கேள்வி கேட்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கவில்லை என்றும் உறுப்பினர்கள் சிலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

# இலங்கை சம்பந்தமான முடிவெடுப்பதில் இந்தியா குழப்பத்தில் ஆழ்ந்துள்ளது

1. பாதுகாப்பு படைகளின் ஒழுக்கத்தை சீரழிக்க பயங்கரவாத மற்றும் கிளர்ச்சி இயக்கங்களாலும், மற்றும் அவர்களது ஆதரவாளர்களாலும் மனித உரிமை மீறல்கள் என்கிற விடயம் பொதுவாக எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதை நாங்கள் கண்டுள்ளோம்.

2. பஞ்சாப்பில் காலிஸ்தானி பயங்கர



வாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், டசின் கணக்கான காவல்துறை உத்தியோகத்தர்களை, அவர்கள் பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்பதன் அடிப்படையில், மனித உரிமைகளை மீறியுள்ளார்கள் என்கிற குற்றச்சாட்டின் பெயரில் அவர்களுக்குத் தொல்லைகள் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை நாம் கண்ணாரக் கண்டுள்ளோம். மனித உரிமைகள் ஆர்வலர்களால் தொல்லை களுக்கு ஆளாகிய இந்திய காவல்துறை சேவையைச் சேர்ந்த ஒரு மூத்த அதிகாரி, தற்கொலை கூடச் செய்து கொண்டார். அவரால் அவமானத்தையும் மன உளைச்சலையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

3. 1994 இல் காஷ்மீரிகளின் மனித உரிமைகளை மீறியது என்கிற குற்றச்சாட்டின் பேரில், தண்டிக்கப்பட வேண்டும் என்று ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் முன்னால் இந்தியாவுக்கு எதிராக கண்டனக் குரல்கள் எழுப்பப் பட்டதையும் நாம் கண்டுள்ளோம். இந்தியாவுக்கு எதிரான இந்தப் பிரசாரத்துக்கு தலைமை தாங்கிய பாகிஸ்தான், ஈரான் மற்றும் இதர நாடுகளின் ஆதரவு கிடைக்காததால் இந்தியாவை கண்டிப்பதில் தோல்வியடைந்தது.

4. 2009 இல் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் மற்றும் கிளர்ச்சியினை அடக்கும் முயற்சியில், இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களைப் புரிந்துள்ளது, என்கிற குற்றச்சாட்டின் பேரில், ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் முன்னால் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவும் மற்றும் சில நாடுகளும் பிரேரித்துள்ள தீர்மானம் சம்பந்தமாக எமது நிலையைப் பற்றிய ஒரு முடிவை எடுக்கு முன்னர் நாம் நமது கடந்த கால அனுபவத்தை மனதில் நிறுத்திப் பார்க்க வேண்டும்.

5. சில விடயங்களைக் கோடிட்டுக் காட்ட வேண்டியுள்ளது. முதலாவதாக. இலங்கை இராணுவத்துக்கு, விடுதலைப் புலிகளை (எல்.ரீ.ரீ.ஈ) நசுக்குவதற்கான சகல உரிமைகளும் மற்றும் கடப்பாடுகளும் உள்ளன. 1991 மே, யில் எமது முன்னாள் பிதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்தது உட்பட, எல்.ரீ.ரீ.ஈயானது இலங்கை மற்றும் இந்திய பிராந்தியங்களில் எண்ணற்ற கொடூரமான பயங்கரவாதச் செயல்களைப் புரிந்துள்ளது.

6. இரண்டாவதாக, எல்.ரீ.ரீ.ஈக்கு எதிரான நடவடிக்கையின்போது, இலங்கை இராணுவத்தினர் தமிழ்ப்பொதுமக்கள்மீது பாரதூரமான மனித உரிமைகள் மீறல்களைப் புரிந்துள்ளனர். இந்த மீறல்களுக்கான காரணத்தின் ஒருபகுதி, இலங்கை இராணுவம் தனது படைகளை சமமற்ற விகிதத்தில் பயன்படுத்தியதும், மற்றும் மறுபகுதி, எல்.ரீ.ரீ.ஈ தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வேண்டுமென்றே பொதுமக்களைப் பயன்படுத்தியதும் ஆகிய இரண்டினாலுமே ஏற்பட்டது.

7. மூன்றாவதாக, கிளர்ச்சியை எதிர்க்கும் நடவடிக்கையின்போது சமமற்ற விகிதத்தில் படைகளை பயன்படுத்திய நிகழ்ச்சிகள், ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானிலும் நடைபெற்றுள்ளன, ஆனால் அவைகள் யுத்தக் குற்றங்களாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரத்தில் முன்னணியில் திகழும் இலங்கைத் தமிழ புலம் பெயர் சமூகம், இலங்கையில் நடந்த மீறல்களை யுத்தக் குற்றங்களாகக் கணக்கிடப்பட வேண்டும் எனக் கோருவது, அபத்தமானதும் அநீதியானதும் ஆகும்.

8. நான்காவதாக, எல்.ரீ.ரீ.ஈ தனது கொடூரமான பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பொதுமக்களைப் பயன்படுத்தியது உண்மையாக இருந்தாலும்கூட, அது இலங்கை பாதுகாப்பு படைகளினால் தமிழர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டதற்கு கூறப்படும் சமாதானமாக கருதமுடியாது. இந்த மீறல்களைப்பற்றி ஒரு முழுநீள விசாரணைக்கு அழைப்பு விடுப்பதோடு அதற்கு பொறுப்பானவர்கள் மீது, உரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதைத் தவிர்த்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம், விசாரணை செய்யும் அதன் பொறுப்பைத் தட்டிக் கழித்துவருகிறது.

9. ஐந்தாவதாக, ராஜபக்ஷவின் அரசாங்கம், தமிழர்களின் அபிலாசைகளை நிறைவு செய்யக்கூடிய திருப்திகரமான ஒரு அரசியல் தீர்வினை காண்பதாக இந்தியாவுக்கும் மற்றும் சர்வதேச சமூகத்தைச் சேர்ந்த இதர நாடுகளுக்கும் வழங்கிய உறுதிப்பாட்டிலிருந்து நழுவுவது, ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் மீதான நல்லெண்ணத்துக்கு குழி பறிப்பதாக அமைந்துள்ளது. மற்றும் இது சம்பந்தமாக இந்தியாவுக்கு வழங்கியிருந்த சகல வாக்குறுதிகளையும் அது அலட்சியம் செய்துள்ளது.

10. ஆறாவதாக, எல்.ரீ.ரீ.ஈக்கு எதிராக வெற்றி பெற்றபின், ராஜபக்ஷவின் அரசாங்கம் தன்னை வஞ்சித்து விட்டதன் விளைவாக இந்திய அரசாங்கம், தான் ஒரு இக்கட்டான நிலையில் மாட்டிக் கொண்டதாக கருதுகிறது.

11. ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கு எதிராக நியாயமான அதிருப்தி இந்திய அரசாங்கத்துக்கு இருந்தாலும் கூட, ஐநா மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவும் இதர நாடுகளும் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளிப்பது தீவிர எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். தமிழ் நாட்டு அரசியற்கட்சிகள், தொடர்ந்து பலவீனமடைந்துவரும் மன்மோகன்சிங்கின் அரசாங்கத்தின்மீது, அமெரிக்கா மற்றும் இதர நாடுகளுடன் இந்தியாவும் சேர வேண்டும் என்று தகாத அழுத்தங்களைப் பிரயோகிப்பது முற்றிலும் தவறானதும் புத்திசாலித்தனமற்றதும் ஆகும்.

12. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது கொண்டுவரப்பட்டுள்ள கண்டனத்துக்கு எதிராக நிற்கும் அதே வேளை, இந்தியா தனது வசமுள்ள அரசியல் மற்றும் பொருளாதார அழுத்தங்கள் உட்பட சகல வழிகளையும் பயன்படுத்தி, ராஜபக்ஷவின் அரசாங்கம், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நம்பிக்கையான விசாரணைகளை மேற்கொண்டு அதற்கு பொறுப்பானவர்களை தண்டிப்பதனையும் மற்றும் தமிழர்களுக்கு உரிய கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் உரிய முயற்சிகளை மேற்கொள்வதை வலியுறுத்த வேண்டும்.

13. ராஜபக்ஷவின் அரசாங்கம், சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகியவற்றின் கரங்களைச் சென்றடைந்து விடலாம் என்கிற அச்சத்தை தூர ஒதுக்கி விட்டு, ராஜபக்ஷவின் அரசாங் கத்துக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு, இந்தியா தயக்கம் காட்டக் கூடாது.' இந்தியாவின் நடவடிக்கை இலங்கையை புண்படுத்தவே செய்யும், இலங்கை தற்போது நடித்து வரும் இரட்டை வேடத்தை அது தொடர்ந்து நடிக்க முயற்சித்தால், அதனை புண் படுத்த இந்தியா தயக்கம் காட்டாது என்கிற செய்தி அதனிடம் தெளிவு படுத்தப்பட வேண்டும்.

14. இலங்கை பற்றிய எமது தற்போதைய குழப்பம், அதனுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான காலம் கனிந்துவிட்ட போதிலும், எமது இயலாமையினாலும், மற்றும் விருப்பமின்மையாலும் அப்படிச் செய்யாததால் ஏற்படுகிறது. பெரிய தடியைக் கையாள வேண்டிய காலம் வந்துவிட்டது.

**இந்திய வெளியுறவுக் கற்கைகள் மையப் பணிப்பாளர் பி.இராமன்**

# விடைபெற்றது "சுவர்"



இந்திய கிரிக்கெட் அணியின் சுவர் என்றழைக்கப்படும் ராகுல் டிராவிடின் 16 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை கடந்த 9 ஆம் திகதி முடிவுக்கு வந்தது.

பெங்களூரில் தனது ஓய்வு முடிவை டிராவிட் அறிவித்தபோது அவருடைய ரசிகர்களுக்கு சற்று அதிர்ச்சியாகவே அமைந்தது.

1996 ஆம் ஆண்டு தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையைத் தொடங்கியவர். பல போட்டிகளில் இக்கட்டான நேரங்களில் களமிறங்கி இந்திய அணியின் சரிவைத் தடுத்து, அணியை மீட்டதாலேயே "சுவர" என்ற பெயருக்கு சொந்தக்காரரானார்.

மகத்தான சாதனைகளுக்கு சொந்தக்காரரான டிராவிடின் இடத்தை எந்த வீரராலும் நிரப்ப முடியாது என்று முன்னாள் வீரர்கள் பலரும் கூறியுள்ளனர்.

டிராவிட் வணிகவியல் பட்டம் பெற்றவர். டிராவிடின் மனைவி விஜேதா ஒரு மருத்துவர். இரண்டு மகன்கள் உள்ளனர். மூத்த மகன் சமித் (வயது -7), இளைய மகன் அன்வே (வயது -3) .


கடந்த ஆண்டு இங்கிலாந்துக்கு ஏதிரான டெஸ்ட் தொடரில் டிராவிடின் அடுத்தடுத்த 3 சதங்களால் கவரப்பட்ட மூத்த மகன் சமித், இப்போது தீவிர கிரிக்கெட் பிரியராக மாறியுள்ளார். மட்டையும் கையுமாகத்தான் திரிந்து கொண்டிருக்கிறாராம். அடுத்த 10 ஆண்டுகளில் இந்திய கிரிக்கெட்டில் ஜூனியர் "சுவரை" பார்க்கலாம்.

# காதலில் விழ வேண்டும்!



நடிகர் சிம்பு அடுத்த வருடம் திருமணம் செய்ய உள்ளதாக தனது டுவிற்றர் வலைதளத்தில் தெரிவித்துள்ளார். "அடுத்த வருடம் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். எங்க் அப்பா, அம்மாவிடம் கல்யாணத்துக்கு சரி என்று சொல்லிவிட்டேன். கல்யாணம் வேண்டாம்னு கடந்த 4 வருடமா சொல்லி வந்தேன். இனிமேலும் கல்யாணத்தை தள்ளிப்போட முடியாதுன்னு நினைக்கிறேன். ஒரு வருஷத்துக்குள்ள நான் காதலில் விழ வேண்டும், அல்லது அம்மா சொல்ற பெண்ணை திருமணம் செய்ய வேண்டும்" என்று கூறியுள்ளார்.

# பாதிப் பேர் கழுதைகள்!



ஆங்கில நாடக ஆசிரியரான ஷெரிடன் நாடாளுமன்றத்தில் ஒருமுறை பேசியபோது, "இந்த நாடாளுமன்றத்தில் உள்ளவர்களில் பாதிப் பேர் கழுதைகள்" என்றார்.

"நீ பேசியதை வாபஸ் வாங்கு" என்று உறுப்பினர்கள் கூச்சலிட்டனர்.

கூச்சலை அடக்கி, ஷெரிடன் அமைதியாக "மன்னிக்க வேண்டும். இந்த நாடாளுமன்றத்தில் உள்ளவர்களில் பாதிப் பேர் கழுதைகள் அல்ல" என்றார்.

# ஒரு கண் ஓட்டுநர்



மோஷே தயான் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். ஒருமுறை அவர் தனது காரை 120 கி.மீ. வேகத்தில் ஓட்டிச் சென்று கொண்டிருந்தார். அப்போது ஒரு இராணுவ பொலிஸ்காரர் தயானின் வண்டியை தடுத்து நிறுத்தி "பாதுகாப்பு அமைச்சரே இராணுவ விதிகளை மீறலாமா?" என்று கேட்டார். அதற்கு தயான், "மிஸ்டர்! எனக்கு உள்ளதே ஒரு கண்தான். அதைக்கொண்டு நான் சாலையைப் பார்த்து வண்டியை ஓட்டுவேனா? வேகமானியைப் பார்ப்பேனா?" என்றார் புன்னகையுடன்.

# இலங்கையில் விந்தையான முன்னேற்றம்; ஜெனிவாவில் இன்று விவரணப் படம்

## சனல் - 4 இற்கு அரசின் பதிலடி

(ஜெனிவா)

இலங்கையில் நடைபெறும் விந்தையான முன்னேற்றம், முரண பாடு, சமாதானம், அபிவிருத்தி மற்றும் வளமான வாழ்க்கை எனும் தலைப்பில் இலங்கை தூதுக குழுவினர் விவரணப் பட மொன்றை இன்று காண்பிக்க வுள்ளனர்.


சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் ஜெனிவா ஐக்கிய நாடு கள் மனித உரிமைப் பேரவை மாநாட்டின் போது ஏக காலத் தில் இன்னுமொரு மண்டபத்தில் காண்பிக்கவுள்ள தொலைக்காட்சி விவரணப் படங்களிலுள்ள பொய் யான தகவல்களை எடுத்துக் காட் டும் முகமாக, இலங்கை தூதுக் குழுவினர் சார்பில் நாடாளு மன்ற உறுப்பினர் ரஜீவ விஜே சிங்க தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை மற்றுமொரு நிகழ்ச்சியை ஜெனிவா ஐ.நா. சபைக் கட்டடத்தில் காண்பிக்க விருக்கிறது. இதற்கு சகல அங் கத்துவ நாடுகளின் பிரதிநிதி களையும் சமுகமளிக்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முதலாவது விவரண திரைச் சித்திரத்திற்கு இலங்கையில் நடைபெறும் விந்தையான முன் னேற்றம், முரண்பாடு, சமாதானம், அபிவிருத்தி மற்றும் வளமான வாழ்க்கை என்று தலைப்பிடப் பட்டுள்ளது.

இந்தத் தொலைக்காட்சி திரைச்சித்திரத்தில் புலிகளே உல கின் முன்னிலையில் உள்ள ஒரு பயங்கரவாத இயக்கம் என்றும் அதற்கு வெகு தூரத்தில் இரண்டா வது இடத்தில் அல் கொய்தா அமைப்பும் இருக்கிற தென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெறும் அபிவிருத்திப் பணிகளைத் தோல்வியடைச் செய்து, நாட்டில் குழப்பத்தையும், அமை தியின்மையையும் ஏற்படுத்து வதே இந்த சனல் - 4 விபரணப் படத்தின் குறிக்கோள் என்று எடுத்துக் காட்டப்படுகிறது. இத் துடன், இன்னுமொரு 10 நிமிட விவரணப் படத்தையும் இலங்கை தூதுக் குழுவினர் அங்கு காண்பிக்கவிருக்கிறார்கள். இதற்கு (Lies agreed upon) பொய்யான தகவல்களுக்கு நாம் அளிக்கும் உண்மையான பதில் எனறு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## புதிய உல்லாச விடுதி திறப்பு



பாசிக்குடாவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உல்லாச விடுதி யினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்து வைத்தார். பாசிக்குடாவில் அமேத்திஸ்ட் றிஷோட் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த உல்லாச விடுதியில், தற்போது 40 அறைகள் உள்ளன. இதற்கு மேலதிக மாக உடற்பயிற்சி அறை, ஓய்வு அறை மற்றும் மதுபான சாலை ஆகியனவும் காணப்படு கின்றன.

அமேத்திஸ்ட் றிஷோட் பணிப்பாளர் ரோகினி நாணயக்கார தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில், தென்னை அபிவருத்தி அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார, சிறுவர் அபிவிருத்தி மற்றுமு மகளிர் விவகார பிரதி அமைசசர எம்.எல்.ஏ.எம்.ஹிஸ் புல்லாஹ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## 98 பணிப் பெண்கள் நாடு திரும்புகின்றனர்

(கொழும்பு)

சவூதி அரேபியாவில் ஜெட்டா நகரில் அநாதாரவான நிலையில் தங்கியுள்ள 98 இலங்கைப் பணிப்பெணகள் இந்த வாரம் நாடு திரும்ப விருப்பதாக "த கல்ப் டைம்ஸ்" இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெட்டாவில் உள்ள இலங்கை உதவித் தூதுவர் ஆதம்பாவா உதுமாலெவ்வை இதனைத் தெரிவித்துள்ளார்.

தம்மிடம் சரணடைந்த இந்தப் பணிப்பெண்களையும், 6 சிறுவர்களையும், ஜெட்டாவின் நாடுகடத்தும் மத்திய நிலையமான தர்ஹீலிடம் ஒப்படைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் அனைவரும் தொழில்வாய்ப்புக்காக சென்று, ஆவணங்களைத் தொலைத்த நிலையில், கைவிடப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.



மாதுருஓய - ஹனிங்கலவில் தமது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வேடுவர் சமூகத்தினர் ஆர்ப்பாட்டத்தில் நேற்று முன்தினம் ஈடுபட்டனர்.

## சனல் -4 நிர்வாகப் பணிப்பாளரின் மனைவி இலங்கைத் தமிழ்ப்பெண்

(கொழும்பு)

சனல் - 4 வீடியோ தொலைக் காட்சி நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளரின் மனைவி இலங் கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தமிழ்ப் பெண் என்பது தெரிய வந்துள்ளதாக கொழும்பிலி ருந்து வெளியாகும் தமிழ் நாழி தழ் ஒன்று தெரிவித்துள்ளது.

சிராணி சுப்பிரமணியம் என்ற பெயருடைய இந்தப் பெண் மணி, சனல் - 4 தொலைக் காட்சியின் நிர்வாகப் பணிப் பாளரை மணந்து லண்டனில் வசித்து வருகின்றார்.

இந்தப் பெண்மணி (சிராணி சுப்பிரமணியம்) சனல் -4 தொலைக்காட்சியில் முன்னர் வர்த்தகப் பணிப்பாளராகப் பணிபுரிந்துள்ளார் என்பதும் இப்போது தெரிய வந்துள்ளது.

சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் புலம்பெயர் தமிழர் களுடனும், புலிகள் அமைப்பு களுடனும் சேர்ந்து செயற்பட்டு வருவது இந்தச் செய்தி மூலம் அம்பலத்திற்கு வந்துள்ளது.

சனல் - 4 இலங்கைக்கு எதிராக பொய்யான தகவல் களை வெளியிடுவதற்கு இந் தப் பின்னணியே காரணமாக இருக்கிறதென்பது இராஜதந்திரி கள் மட்டத்தில் பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது.

## இராஜதந்திர முன்னெடுப்பை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய எந்த நடவடிக்கையையும், அரசாங்கம் இதுவரையில் மேற்கொள்ளவில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது இதனைத் தெரி வித்தார்.

88, 89 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் இருந்த போது, இது போன்று மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை தொடர்பில் பிரச்சினைகள் எழுப்பப்பட்டன.

எனினும் இதன் போது எந்த அழுத்தங்களும் இல்லாமல், இராஜதந்திர ரீதியாக ஐக்கிய தேசிய கட்சி இந்தப் பிரச்சினையை சமாளித்தது.

ஆனால், தற்போது இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அர சாங்கம் எந்த விதமான இராஜதந்திர முன்னெடுப்பபையும் மேற் கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரசியல் குடும்பத்தில் இருப்பது தேர்தல் வெற்றிக்கான உத்தரவாதமல்ல

### புதுடில்லியில் நாமல் ராஜபக்ஷ



(கொழும்பு)

ஒரு அரசியல் குடும்பத்தில் இருப்பதனால் மட்டும் வெற்றி பெறமுடியாது. அரசியல் குடும் பத்தில் இருப்பதன் மூலம் தேர்த லில் போட்டியிடுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வேண்டுமானால் எளிதில் பெற்றுக்கொள்ள முடி யும்.

ஆனால் வெற்றியை உறுதி யாகப் பெற்றுக்கொள்ள முடி யாது என அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் நாமல் ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில்,

வம்சம் ஒரு சுமை அல்லது வரம் ஒரு அரசியல் குடும் பத்தை சேர்ந்த காரணத்தால் கட்சி ஒன்றில் போட்டியிடும் வாய்ப்பை மட்டுமே எளிதில் பெறமுடியும். அது வெற்றிக்கு உத தரவாதமில்லாத ஒன்று. எனவே அது அவசியமில்லாதது எனவும் தெரிவித்தார்.

நாமல் ராஜபக்ஷ 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பின ராக இணைந்து கொண்டார். இவர் ராஜபக்ஷ பரம்பரையின் மூன்றாவது அரசியல் வாரிசா வார்.

## விடுதலைக்கு புதிய திட்டம்

(கொழும்பு)

சிறைத்தண்டனை பெற்று வரும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விடுதலைக்கு வலியுறுத்தும் புதிய வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது என அவரது பாரியாரான அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்கான மக்கள் செயற்பாட்டு அணி என்ற புதிய அமைப்பை உருவாக்கும் நோக்கி லேயே இந்த வேலைத்திட்டம் முன்வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நாடாளுமன்ற உறுப்பினர் மீது அழுக்கு முட்டைத் தாக்குதல்

(பதுளை)

பதுளையில், தான் மேற் கொளளும் சமூக பணிகளை நிறுத்துவதற்கு அரசாங்கத்தி லுள்ள சிலர் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக அரசாங்கத் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பி. திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

பதுளையிலுள்ள 200 பாட சாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை விநியோகிக்க சென்றபோது இ.தொ.கா. ஆதர வாளர்கள் சுமார் 100 பேர் சூழ்ந்து கொண்டு தன்னை அச்சுறுத்தி யதோடு, இவ்வைபவத்தையும் இரத்துச செய்ய நிர்ப்பந்தித்த னர்.

அந்நபர்கள் தனது வாக னத்தை அழுகிய முட்டைகளால் தாக்கியதாகவும் இ.தொ.கா. மாத்திரமே அங்கு சமூகப் பணி களில் ஈடுபட முடியும் என அவர் கள் கூறியதாகவும் திகாம்பரம் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து பாது காப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு, தான் அறிவித் துள்ளதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இன்று சந்தித்துப் பேசவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# இடம்பெயர்ந்தோர் பிரச்சினை குறித்து நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்படும்

## புதுக்குடியிருப்பில் ரணில் உறுதி



(புதுக்குடியிருப்பு)

இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை குறித்து நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்படும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதுக்குடியிருப்பு-கோம்பாவில் திம்பிலியில் தங்க வைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்த மக்களை நேற்றுமுன்தினம் சந்தித்த போது தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்டப் போர் நடந்த முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த மக்கள் தற்போது குடிமர்தப்பட்டுள்ள கோம்பாவில் பகுதியில் உள்ள திம்பிலி என்ற இடத்துக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மக்களுடன் கலந்துரையாடினார்.

இடம்பெயர்ந்து மூன்றாண்டுகள் நெருங்குகின்ற போதிலும் தம்மைச் சொந்தக் குடிமனைகளில் குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தார்கள்.

வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு மத்தியில் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுபவும் உரிய வசதி இல்லை என்றும் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்தபோது இராணுவத்திடம் சரணடைந்த தமது பிள்ளைகள் தொடர்பில் இன்னும தகவல்கள் ஏதும் இல்லையென்றும், தம்மை தமது சொந்த இடங்களில் குடியமர்த்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேணடும் என்றும் இந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தொிவித்த ரணில் விக்ரமசிங்க, மீள்குடியேற்றம் தொடர்பில் அரசு கூறிவருகின்ற முன்னேற்றகரமான தகவல்களை நடைமுறையில் காணமுடியவில்லை.

பல பிரதேசங்களில் மக்கள் உரிய இடங்களில் குடியமர்த்தப்படவில்லை. இன்னும் சில இடங்களில் இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் எவை என்ற எல்லைக்கு வரையறை இல்லை.

மீள்குடியேற்றம் பற்றி அரசிடம் முறையான கொள்கைத் திட்டம் எதுவும் இல்லை. இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சனைகள் குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்படும் என்றும் ரணில் குறிப்பிட்டார்.

# 3 இலட்சத்துக்கு மேற்பட்டோர் சொந்த இடம் திரும்பியுள்ளனர்

## வவுனியா அரச அதிபர்



(வவுனியா)

வடக்கில் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையின்போது வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களில் 97 வீதமானவர்கள் தற்போது அவர்களது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

வவுனியா மெனிக்பாம் நிவாரணக் கிராமங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் மீள் குடியமர்வுக்காக தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ்வாதார செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் அறிக்கை கிடைத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் ஆறாயிரம் பேர் மாத்திரமே தற்போது நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ளனர்.

மெனிக்பாம் நிவாரணக் கிராமங்களுக்கு உள்வாங்கப்பட்ட அகதிகளில் சுமார் 11 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்கள் என அடையாளம் காணப்பட்டதாக அவர குறிப்பிட்டார்.

இவர்களில் சுமார் 95 வீதமானவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு தற்போது சமூகமயப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஊவா மாகாண அதிகாரிகள் வன்னிக்கு; இடமாற்றத்தை இரத்துச் செய்யக் கடிதம்

(கொழும்பு)

ஊவா மாகாணத்தில் உள்ள தமிழ் அரச அதிகாரிகளை வன்னி மாவட்டத்துக்கு இடமாற்றும் தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரி, ஊவா மாகாண ஆளுநர் நந்தாமெத்தீவினால், உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண சபை உறுப்பினர் ஏ.அரவிந்த்குமாரின் வலியுறுத்தலுக்கு அமைய இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண சபை உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணியின் நிதிச் செயலாளருமான ஏ.அரவிந்குமார் இந்தத் தகவலை ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

# செல்லும் வழியை செப்பனிடுமாறு ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வீதியைச் செப்பனிடக் கோரி லிந்துலை மெராயா நகரில் நேற்றுமுன்தினம் காலை மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா பிரதேச சபைகுட்பட்ட திஸ்பனைச் சந்தியில் இருந்து எல்ஜின் வரையான சுமார் ஏழு கிலோ மீற்றர் வீதி 20 வருடங்களுக்கு மேல் செப்பனிடப்படாததைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது.



இந்த வீதியை 30 இற்கும் மேற்பட்ட தோட்டப் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பயன்படுத்துவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும, ஆசிரியர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மெராயா நகரின் கடைகள் மூடப்பட்டிருந்ததுடன், தனியார் பஸ்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் என்பனவும் சேவையில் ஈடுபடவில்லை.

# பொலிஸ் திணைக்களத்தின் அவசர சேவை மறுசீரமைப்பு

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தின் அவசர சேவைப் பிரிவு நவீன வசதிகளுடன் பொதுமக்களுக்கான தனது சேவையைச் சீரமைத்துள்ளது.

இதுவரை காலமும் 119 என்ற பொலிஸாரின் அவசரத் தொலைபேசி சேவைக்கு எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள முடியாதுள்ளதாகக் கூறி பொதுமக்களிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தொலைபேசிச் சேவை எந்த நேரத்திலும் தொடர்புகொள்ள முடியாதுள்ளது என்றும் சிலவேளைகளில் பொலிஸார் பல மணித்தியாலங்களின் பின்னர்தான் சம்பவ இடத்திற்கு வருகின்றனர். அல்லது அவர்கள் வராமல் விடுகின்றனரென பொதுமக்கள் முறைப்பாடு செய்கின்றனர் என பொலிஸ் பேச்சாள் அஜித் ரோஹன கூறினார்.

இதனைத் தொடர்ந்து இப்பிரச்சினையை சீர்செய்யும் முகமாக பொலிஸ் தலைமையகம் சேவை நீடிப்பை மேற்கொள்ளவுள்ளது. புதிய வசதிகளுடன் கூடிய 119 என்ற பொலிஸாரின் அவசரத் தொலைபேசி சேவையை பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

# புனர்வாழ்வு பெற்ற 384 பேர் 29ஆம் திகதி ஒப்படைப்பு

(கொழும்பு)

மோதல்களின் போது படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்ட 384 இளைஞர், யுவதிகள் எதிர்வரும் 29 ஆம் திகதி தமது பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் எதிர்வரும் 29 ஆம் திகதி பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் இந்நிகழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தலைமையில் நடைபெறவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்தார்.

அன்றைய தினம் தமது புனர்வாழ்வுப் பயிற்சிகளை முடித்துக் கொண்ட 384 பேர் தமது குடும்பத்தாருடன் ஒன்றிணைக்கப்படுவர். இவர்களுள் 55 பேர் பெண்களாவரெனவும் செயலாளர் கூறினார்.

படையினரிடம் சரணடைந்த ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் முறையான புனர்வாழவுப் பயிற்சிக்குப் பின்னர் கட்டம் கட்டமாக தமது குடும்பத்தாரிடம் ஒன்றிணைக்கப்பட்டதுடன் சமூகத்திலும் பல்வேறு அந்தஸ்துகளில் சேவையாற்றி வருகின்றனர்.

இதுவரையில் புனர்வாழ்வு பெற்ற 11 ஆயிரத்து 200 பேர் தமது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இறுதியாக 700 பேர் வரையிலானோரே தற்போது புனர்வாழ்வு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

29 ஆம் திகதி 384 பேரும் விடுவிக்கப்பட்டால் இன்னும் சிறிய தொகையினரே தமது பயிற்சிகளை முடித்துக் கொள்ளும் வரையில் எஞ்சியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மன்னாரில் அறுவடை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பெரும்போக நெற்பயிர் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இம்முறை பெரும்போக நெற் பயிர்ச் செய்கை வெற்றியளித்திருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இயந்திரங்களைப் பயன்படுத்தி தற்போது மன்னார் மாவட்டத்தில் நெல் அறுவடை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மீன் பிடித்தவரை முதலை பிடித்தது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மகிழடித்தீவில் மீன்பிடிக்கச் சென்ற வாலிபரை முதலை இழுத்துச் சென்றுள்ளது. காணாமல் போனவர் கே.சந்திரகாந்த (வயது-24) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

காணாமல் போனவரைத் தேடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. கொக்கட்டிச்சோலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


# கனகராயன் குளத்தில் உணவகங்களுக்கு சீல்

வவுனியா வடக்கு பிரதேசங்களான கனகராயன்குளம் மற்றும் புளியங்குளம் ஆகிய பிரதேசங்களில் சுகாதாரமற்ற முறையில் இயங்கி வந்த 8 உணவகங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது என வவுனியா வடக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வி.சுரேந்திரனின் பணிப்பின் பேரில் பொதுச் சுகாதாரப பரிசோதகர்கள் மற்றும் சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட போதே இந்த உணவகங்கள் சுகாதார முறையில் இயங்காமை கண்டுபிடிக்கப்பட்டன.

அத்துடன் குறித்த உணவகங்களின் உரிமையாளர்கள் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு தலா 50 000 ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் உணவகங்கள் எதிர்வரும் 14 நாட்களுக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவா பிரச்சினை முடிவடைந்தவுடன் கூட்டமைப்பை தடை செய்ய வேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்க தலைவர்



(கொழும்பு)

ஜெனிவா பிரச்சினை முடிந்த உடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்து சம்பந்தன் தலைமையிலான அனைவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயககத்தின் தலைவர் டாக்டர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்படுமென அரசதரப்பினர் ஜெனிவாவில் உறுதிமொழி வழங்கியுள்ளது தொடர்பாக கருத்து வெளியிடும் போதே குணதாச அமரசேகர இதனைத் தெரிவித்தார்.

ஜெனிவாவில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக காய்களை நகர்த்தி வரும் சூழ் நிலையில் அமெரிக்கப் பிரதிநிதியுடன் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் வைத்து கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

தனி இராஜ்யத்தின் அரசியல் தலைவரென்ற ரீதியில் சம்பந்தனின் செயற்பாடு அமைந்துள்ளது. இது இலங்கையின் அரசியலமைப்பை மீறும் செயலாகும். அத்தோடு நாட்டுக்கு எதிரான தேசத்துரோகச் செயலாகும்.

எனவே ஜெனிவாவில் எமக்கு சார்பாகவோ, எதிராகவோ நிலைமைகள் உருவாகலாம், அதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடனடியாக தடை செய்ய வேண்டும். பின்னர் யுத்த காலத்தில் கூட்டமைப்பினர் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய உதவிகள் ஒத்துழைப்புக்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் நாட்டுக்கு எதிரான தேசத்துரோகச் செயற்பாடுகள் தொடர்கதையாகிவிடும்.

நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை அரசாங்கம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறது என்பதை கவனிக்க வேண்டும். இவ் ஆணைக்குழு தனது வரையறையை மீறி அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்தியுள்ளது. இதனை ஏற்க முடியாது. அதேவேளை இராணுவத்தினர் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் இதில் வெளிநாடுகளின் தலையீடுகள், கண்காணிப்புக்கள் இருக்கக் கூடாது.

இலங்கையில் ஓய்வு பெற்ற நீதியரசர்கள் ஐவரைக் கொண்ட சுயாதீனக் குழுவை அமைத்து சாட்சியங்களைப் பெற்று இராணுவத்தினர் விசாரணை செய்யப்பட வேண்டும். இவ்வாறு குற்றவாளி யார்? நிரபராதி யாரென்று தீர்மானிக்க வேண்டும். ஏனைய விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக் குழுவிலேயே தீர்மானங்கள் எடுக்க வேண்டும். அதில் தலையிடும் உரிமை நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு கிடையாது என்றார்.

# புதிய பாம்பாசனம்



(கொழும்பு)

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு, அவ்வமைச்சின் சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவுடன் சேர்ந்து ஏற்பாடுசெய்த சிறு தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளின் கண்காட்சியில் (விவசாய - 2012) பிரதான அதிதியாகக் கலந்து கொண்ட பிரதமர் டி.எம். ஜயரட்ண அக்கண்காட்சியைப் பாரவையிட்டார். அப்போது புதியவடிவில் அமைக்கப்பட்ட ஆசனமொன்றில் பிரதமர் டி.எம் அமர்ந்திருந்தார்.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, பிரதி அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம் அஸ்வர், மற்றும் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சு.சோ ஹேவாபத்திரண ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# இருதய சிகிச்சை முகாம்

(கோப்பாய்)

கோப்பாய் லயன்ஸ் கழகமும் கொழும்பு வைத்தியசாலை மற்றும் அச்செழு 511 ஆவது படைப்பிரிவும் இணைந்து இருதய சிகிச்சை முகாம் ஒன்று நடாத்தப்பட்டது.

இம்முகாம் கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இம்மருத்துவ முகாமில் இருதயத்துடன் தொடர்புபட்ட 300 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர்.

இச்சிகிச்சை முகாமில் வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்களா கிய சித்திராங்கனி பெரேரா, அனில் ரோகன் பெரேரா, விவேக் குப்தா, லெல்வலா, பீ.ரி.குணசேகரம் ஆகியோர் கலந்து கொண்டு சிகிச்சைகளை மக்களுக்கு வழங்கினர்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக 51 ஆவது படையணியின் பிரிகேடியர் பியல் விக்கிரமரத்ன கலந்துகொண்டார். சிகிச்சை முகாமின் ஆரம்ப நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் எம்.பிரதீபன், யாழ் போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சை நிபுணர். பீ.லக்ஸ்மன், 511, 512, 513 ஆகிய படையணிகளின் தலைவர்கள், கோப்பாய் லயன்ஸ் கிளப்பின் லயன் ஈ.பாலசுந்தரம், கோப்பாய் நாவலர் அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இவ்வாண்டு காலாவதியான பொருட்கள் விற்றமை, விலைப்பட்டியல் காட்சிக்குட்படுத்தாமை, கூடிய விலைக்கு பொருட்கள் விற்றமை தொடர்பாக வர்த்தகர்கள் பலர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாவட்ட விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி நவரட்ணம் சிவசீலன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள வர்த்தகர்கள் மீது இக் குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு 4 இலட்சத்து 24 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என மேலும் குறிப்பிட்டார்.

# சுற்றுலாப் பயணிகள் வருகை 21 சதவீதம் அதிகரிப்பு

சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 423 பேர் வருகை தந்துள்ளனர்.

இதனடிப்படையில் கடந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் வருகை தந்தவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் 21 சதவீத அதிகரிப்பு என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களின் வருகை 83 சதவீதத்திற்கு அதிகமாகவுள்ளதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

சுற்றுலாப் பயணிகளின் அதிகரப்புக்கு முக்கியமான காரணம் இணையத் தளத்தின் ஊடாக நுழைவு அனுமதியினைப் பெறுவதற்கான வசதிகள் வழங்கப்பட்டமையே என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## குண்டுகள் மீட்பு

கரவனவெல்ல பாலத்தின் கீழ் இருந்து மூன்று மோட்டார் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ருவன்வெல்ல பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்தே நேற்று முன்தினம இவை மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். வழமை போன்று இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று திங்கட்கிழமை அதி தாழ்மட்டத்துக்கு 127 ரூபாவாக வீழ்ச்சி கண்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி முதலில் 125.50 ரூபாவாக இருந்தது. அரச வங்கியொன்றில் அமெரிக்க டொலர் சுமார் 127 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

# பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி ஜெனிவாவிற்கு பயணம்

(கொழும்பு)

காணாமல் போன லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட ஜெனிவாவிற்கு விஜயம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளுக்கு சமாந்திரமாக நடைபெறும் நிகழ்வு ஒன்றில் சந்தியா உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச மன்னிப்புச் சபை இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. பிரகீத் எக்நெலிகொடவின் மனைவி, சந்தியா இந்தக் கூட்டத்தில் உரையாற்றக் கூடுமென இலங்கை அரசாங்கத் தகவல்கள் ஊகம் வெளியிட்டுள்ளன.

2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி பிரகீத் எகனெலிகொட காணாமல் போயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வீரசிங்கம் ம.வி கல்லூரியாக தரமுயர்வு

(மீசாலை)

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் வடமாகாண கல்வி அமைச்சினால் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி என தரமுயர்த்தப்பட்டுள்ளது. 1926ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையாக 1998 ஆம் ஆண்டு நவோதயா பாடசாலை தரமுயர்த்தப்பட்டது. 1180 மாணவர்களுடன் இயங்கும் இந்தப் பாடசாலை கல்வித்துறையில் மாகாணம், தேசிய மட்டங்களில் ஈட்டிய சாதனைகளின் பிரதிபலனாகவே தற்போது தரமுயர்த்தப்பட்டுள்ளதாக பாடசாலைச் சமுகத்தினர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

உயர்தரம் வரை வகுப்புகளைக் கொண்ட இந்தப்பாடசாலை தரமுயரத்துவதற்கு அயராது பாடுபட்டஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் வலயக் கல்வி அலுவலகத்தினர், மாகாணக் கல்வி அலுவலகத்தினர், மாகாண கல்வி அமைச்சு ஆகியோருக்கு பாடசாலை சமுகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி இந்தப் பாடசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளது. (11)

# ஓவிய, சிற்பங்கள் கண்காட்சி யாழ்.இந்துக் கல்லூரியில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலாசார அலுவலர்கள் திணைக்களமும், யாழ். மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய அரச ஓவியச் சிற்பக் கண்காட்சி நேற்று யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வில் கலசாரம் மற்றும் கலை அலுவலர்கள் அமைச்சில் ரி.ரி.ஏக்கநாயக்க கண்காட்சிக் கூடத்தினை நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இக்கண்காட்சியில் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் பலதரப்பட்ட ஓவியங்கள், சிற்பங்கள், கார்ட்டூன்கள் காட்சிப் படுத்தப்பட்டன.

அங்கு காட்சிப்படுத்தப்பட்ட ஓவியங்கள் பண்டைய வாழ்க்கை முறையினையும், யாழ்ப்பாணத்தின் பண்டைய பொக்கிஷங்களையும் பாதுகாப்பது தொடர்பாகவும், உயிரூட்டப்பட்ட ஓவியங்கள் வாழ்க்கையின் சித்திரத்தை எடுத்துக் காட்டின.

இந்நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ. இளங கோவன் உட்பட கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் செயலாளர்கள், கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எஸ்)

# நூல் வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உயிர்ச்சமர் கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் அலகு உதவி விரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஜப்பான், கக்சுயின் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பிரதம நூலகர் அ.ஸ்ரீகாந்தலட்சுமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# வவுனியா வடக்கு வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள்

(வவுனியா)

மீள்குடியேற்றப் பிரதேசத்தை அதிகளவில் உள்ளடக்கிய வவுனியா வடக்கு க்ல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் புளியங்குளம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் வலயமானது நீண்ட காலத்தின் பின்னர் அனைத்து பாடசாலைகளும் இயங்கும் நிலையில் உள்ளதுடன், அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்கு கொள்ளும் வகையில் வலய மட்டப்போட்டிகள் இடம்பெறவுள்ளது.

எனினும் இம்முறை சிறப்பாக இடம்பெறவுள்ள இவ்வலய மட்டப் போட்டிகள் நாளை ஆரம்பமாகி எதிர்வரும் 24 ஆம் திகதி இறுதிப் போட்டிகள் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (125)

# திக்கம் வெற்றி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கிடையிலான விலகல் முறையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் 3:1 என்றகோல் அடிப்படையில் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் மதியம் 3.30 மணிக்கு இடம்பெற்ற விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கற்கோவளம் உதயதாரகை அணி மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் திக்கம் இளைஞர் அணி நிதானத்துடன் விளையாடி பிரதேச செயலகக் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது. (எஸ்)

# மருதங்கேணி கோட்ட மட்ட போட்டி முடிவுகள்

மருதங்கேணி கோட்ட மட்டப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றில் ஒரு பகுதி நேற்றைய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன அதன் தொடர்ச்சி...

**100 மீற்றர் ஓட்டம் 15 வயது ஆண்கள்**

முதலாமிடம் - எனஅனுசன் மருதங்கேணி எச்.ரி.எம் பாடசாலை, இரண்டாமிடம் - இ.நிலைக்சன்ராஜ் மணற்காடு றோ.க.த.க பாடசாலை, மூன்றாமிடம் எம். மதுசன் -மருதங்கேணி எச்.ரி.எம் பாடசாலை.

**200 மீற்றர் ஓட்டம் 15 வயது ஆண்கள்**

முதலாமிடம் என்.அனுசன் மருதங்கேணி எச்.ரி.எம் பாடசாலை, இரண்டாமிடம் -ஏ.அஜன் செம்பியன்பற்று ஜி.ரி.எம். பாடசாலை, மூன்றாமிடம் -என். சிறிவர்னன் கட்டைக்காடு ஆர்.சி.ரி.எம் பாடசாலை.

**400 மீற்றர் 15 வயது ஆண்கள்**

முதலாமிடம் - இ.நிலக்சன்ராஜ மணற்காடு றோ.க.த.க பாடசாலை, இரண்டாமிடம் எம். மதுசன் மருதங் கேணி எச்.ரி.எம் பாடசாலை, மூன்றாமிடம் - கே.றஜீபன் மணறகாடு றோ.க.த.க பாடசாலை.

**நீளம் பாய்தல் 15 வயது ஆண்கள்**

முதலாமிடம் - எம்.பெறஸ் கட்டைக்காடு றோ.க.த.க பாடசாலை, இரண்டாமிடம் - பி.றமேஸ் அம்பன் அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, மூன்றாமிடம் ஜே.ஜெயதாஸ் அம்பன் அமெரிக்கமிசன் தமிழ்க் கலவன் பாடசாலை.

**உயரம் பாய்தல் 15 வயது ஆண்கள்**

முதலாமிடம் - ஆர்.வர்மிலன் உடுத்துறை மகா வித்தியாலயம், இரண்டாமிடம் -எஸ். கபிநாத் உடுத்துறை மகாவித்தியாலயம், மூன்றாமிடம் எஸ். சிந்துராஜ் ஆழியவளை சி.சி.ரி.எம் பாடசாலை. (116) (தொடரும்)

# வவுனியா வடக்கு கல்வி வலய பெருவிளையாட்டு முடிவுகள்

(வவுனியா)

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக் கிடையிலான பெருவிளையாட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**கரப்பந்தாட்டம் 15 வயது ஆண்கள்**

முதலாமிடம் - கிடாச்சூரி அ.த.க பாடசாலை, இரண்டாமிடம் - புதுக்குளம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம் 17 வயது ஆண்கள்**

முதலாமிடம் புதுக்குளம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் கிடாச்சூரி அ.த.க பாடசாலை, மூன்றாமிடம் கல்மடு மகாவித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம் 19 வயது ஆண்கள**

முதலாமிடம் - புதுக்குளம் மகாவித்தியாலயம் இரண்டாமிடம் - கனகராயன் குளம் மகாவித்தியாயலம், மூன்றாமிடம் - நெடுங்கேணி மகாவித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம் 15 வயது பெண்கள்**

முதலாமிடம் கிடாச்சூரி அ.த.க பாடசாலை, இரண்டாமிடம் சின்னடம்பன் பாரதி வித்தியாலயம், மூன்றாமிடம் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம் 17 வயது பெண்கள்**

முதலாமிடம் கிடாச்சூரி அ.த.க பாடசாலை, இரண்டாமிடம் - கனகராயன்குளம் மகாவித்தியாலயம், மூன்றாமிடம் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்.

**கரப்பந்தாட்டம் 19 வயது பெண்கள்**

முதலாமிடம் கிடாச்சூரி அ.த.க பாடசாலை.

**வலைப்பந்தாட்டம் 15 வயது பெண்கள்**

முதலாமிடம் - பூம்புகார் கண்ணகி வித்தியாலயம், இரண்டாமிடம் - குளவிசுட்டான் அ.த.க பாடசாலை, மூன்றாமிடம் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்.

**வலைப்பந்தாட்டம் 17 வயது பெண்கள்**

முதலாமிடம் - கனகராயன் குளம் மகா வித்தியாலயம், இரண்டாமிடம் - தரணிக்குளம் கணேஷா வித்தியாலயம், மூன்றாமிடம் - தவசியாகுளம் அ.த.க பாடசாலை.

**வலைப்பந்தாட்டம் 19 வயது பெண்கள்**

முதலாமிடம் - கிடாச்சூரி அ.த.க.பாடசாலை, இரண்டாமிடம் தவசியாகுளம் அ.த.க. பாடசாலை, மூன்றாமிடம் - கல்மடு மகா வித்தியாலயம்.

**கபடி 15 வயது ஆண்கள்**

முதலாமிடம் - பூம்புகார் கணணகி வித்தியாலயம், இரண்டாமிடம் - புதுக்குளம் மகா வித்தியாலயம், மூன்றாமிடம் தரணிக்குளம் கணேஷா வித்தியாலயம். (12) (தொடரும்)



யாழ்.நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டியில் விருந்தினர்கள் அமர்ந்திருக்க அதிபர் பா.சிவராசா உரையாற்றுவதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வையும் காணலாம்.

# மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி

மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி டக்வேர்த் லூயிஸ் அடிப்படையில் 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.




நேற்று முன்தினம் சென்.வின்சன்ற் இல் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. மழை காரணமாகத் தாமதித்து ஆரம்பித்த இப் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில், மழை திரும்பவும் குறுக்கிட்டது. அதன் பின்னர் 40 ஓவர்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டு ஆரம்பித்த போட்டியில் அவுஸ்ரேலிய அணி ஓட்டங்களைப் பெறச் சிரமப்பட்டது.

40 ஓவர்களின் நிறைவில் அவுஸ்ரேலிய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. சராசரியாக ஓர் ஓவருக்கு அவுஸ்ரேலிய அணி 3.85 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் டேவிட் ஹசி 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட போதிலும், 62 பந்துகளை எடுத்துக் கொண்டார். ஷேன் வொற்சன் 41 பந்துகளில் 25 ஓட்டங்களையும், மைக்கல் ஹசி 52 பந்துகளில் 24 ஓட்டங்களையும், ஜோர்ஜ் பெய்லி 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பநதுவீச்சில் சிறப்பாகப் பந்துவீசிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சாளர்கள் சார்பாக சுனில் நரைன் 27 ஓட்டங்களுக்கு 4 விககெட்டுக்களையும், கேமர் றோச் 2 விக்கெட்டுக்களையும், டுவைன் பிராவோ, டெரன் சமி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

டக்வேர்த் லூயிஸ அடிப்படையில் 40 ஓவர் களில் 158 ஓட்டங் களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் பதிலளித்தாடிய மேற்கிந்தியத் த்வுகள் அணி தனது முதலாவது விக்கெட்டை முதலாவது பந்திலேயே இழந்த போதிலும், பொறுமையாக ஆடி 38.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கெரன் பொலார்ட் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும், டுவைன் பிராவோ 30 ஓட்டங்களையும், ஜோன்சன் சார்ள்ஸ் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் அவுஸ்ரேலிய அணி சார்பாக பிரட் லீஷ ஷேன் வொற்சன், ஷேவியர் டொகேர்டடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக சிறப்பாகப் பந்துவீசிய சுனில் நரைன் தெரிவானார். இந்தப் போட்டியின் முடிவை அடுத்து 5 போட்டிகள் கொண்ட தொடரில் இரண்டு போட்டிகளின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு போட்டிகளில் வெற்றிபெற்று தொடர் சமநிலையில் காணப்படுகிறது.

# இறுதிப்போட்டியில் பங்களாதேஷ் இன்று முடிவு தெரியும்

ஆசியக் கிண்ணத் தொடரின் இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான போடடி இன்று நடைபெறவுள்ளது.


இலங்கை அணி ஏற்கனவே இறுதிப் போட்டிக்கு தெரிவாகும வாய்ப்பை இழந்துள்ள நிலையில், பங்களாதேஷ் அணிக்கு இந்தப் போட்டி முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் பட்சத்தில் பங்களாதேஷ் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும்.

ஏற்கனவே பாகிஸ்தான் அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

இந்திய அணி நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் வெற்றி பெற்ற 8 புள்ளிகளைப் பெற்றுள்ள போதும், பங்களாதேஷ் அணி ஓட்ட விகித புள்ளிகளின் அடிப்படையில் இன்றைய போட்டியில் வெற்றி பெற்றால் இறுதிப் போட்டிக்கு தெரவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆரம்ப விழாவில் அமிதாப் பச்சன்



இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் ஆரம்ப விழாவில் இந்தியாவின் சுப்பர்ஸ்டார் அமிதாப்பச்சன் பங்குபற்றவுள்ளார். இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் ஆரம்ப விழா எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி சென்னையில் இடம்பெறவுள்ளது.

69 வயதான அமிதாப் பச்சன், ஐ.பி.எல். தொடரின் ஆரம்ப விழாவுக்குத் தன்னைத் தயார்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். ஆசியக்கிண்ணப் போட்டிகள் விரைவில் நிறைவடையவுள்ளன. அதன் பின்னர் ஐ.பி.எல். தொடர் ஆரம்பிக்கவுள்ளது.

அதில் நான் பங்குபற்றவுள்ளேன். பதற்றமாக உள்ளது எனத் தெரிவித்த அவர், ஏற்கனவே தயார் படுத்த ஆரம்பித்து விட்டதாகவும், ஆரம்பநிலைத் தயார்படுத்தல்களுக்குத் திரும்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அனைத்து அணித் தலைவர்களையும் சந்திப்பது பெருமை வாய்ந்த ஒன்றாக அமையும் எனத் தெரிவித்த அமிதாப் பச்சன், அவர்களை இதுவரை தொலைக்காட்சியில் பார்த்துள்ள நிலையில் நேரடியாகச் சந்திப்பது பெருமையானது எனத் தெரிவித்தார்.

# ஜனநாயகக் கடமையை நிறைவேற்றிய புதுமணத் தம்பதிகள்

(சங்கரன்கோவில்)

சங்கரன்கோவில் இடைத் தேர்தல் வாக்குப்பதிவில், உறவினர்கள் எதிர்ப்பையும் மீறி, வாக்குச் சாவடிக்கு வந்த மணமக்கள், வாக்களித்துச் சென்றனர்.

சங்கரன்கோவில் ராமசாமிபுரத்தைச் சேர்ந்தவர் மாடசாமி. இவருக்கும், சங்கரஜோதிக்கும் நேற்று முன்தினம் திருமணம் ஏற்பாடு செய்திருந்தனர். இடைத்தேர்தலில் வாக்களிக்க, மாடசாமி முடிவு செய்தார். காலை 7.30 -8.30 மணிக்கு முகூர்த்தம். திருமணத்திற்குப் பின், வாக்களிக்கவருவது சிரமம் என்பதால், முன்கூட்டியே செல்லத் திட்டமிட்டார். அவர் வாக்களிக்கும் நிலையத்தில்தான் சங்கர ஜோதிக்கும் வாக்கு இருந்தது. வாக்களிக்க இருவரும் பெற்றோரிடம் விருப்பம் தெரிவித்தனர். முகூர்த்தத்திற்கு நேரமாகும் வேளையில், இதெல்லாம் தேவையில்லை என உறவினர்கள் எதிர்த்தனர். அனைவரையும் சமாதானப்படுத்தி, காலை 7 மணிக்கு முதல் ஆளாக வாக்களிப்பு நிலையத்திற்கு வந்தனர். அவர்களது நிலையத்தில் வாக்குப்பதிவு தாமதம் ஆனது. திருமணத்தை முடித்துவிட்டு வரலாம் என நண்பர்கள் அறிவுரை



கூறியதால் கல்யாண மண்டபத்திற்கு சென்றனர். 8.20மணிக்கு திருமணம் முடிந்த கையோடு, மணமக்கள் இருவரும் வாக்களிக்கப் புறப்பட்டனர். உறவினர்கள் மீண்டும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதைப் பொருட்படுத்தாத மணமக்கள், ஜனநாயக கடமையாற்ற மீண்டும் வாக்களிப்பு நிலையத்திற்கு வந்தனர். மணமக்களின் நிலை அறிந்த உள்ளூர் வாசிகள் அவர்களை வரிசையில் நிற்கவைக்காமல் வாக்களிக்க அனுமதித்தனர்.

# நலம் பெற விரும்புவோம்



இத்தவக்காலத்தில் நாம் நலம் பெற விரும்புகிறோமா, மனமாற்றம் அடைய விரும் புகிறோமா என்று நம்மையே கேட்டுக்கொள்வோம். மன மாற்றத்திற்கான அடிப்படை ஆர்வமோ, விருப்பமோ இல்லாவிட்டால், மனமாறறத்தை இறைவன் எப்படித் தருவார்? நாம் விரும்புவோம், நம் விருப்பத்தை அறிக்கை இடுவோம்.

நம்மை நாமே அருள்நிலையில் வைத்திருந்தால், எல்லாவற்றிலும் நமக்கு முதலிடம் கிடைத்திருக்கும். முப்பத்தெட்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இருப்பினும் மனம் சோர்ந்திட வேண்டாம். நம்பிக்கையோடு இருப்போரைக் கடவுள் கைவிடுவதில்லை. அவரே தேடிவருகிறார்.

சில சமயங்களில் ஆண்டாண்டு காலமாகத் துன்பம் நம்மைத தொடர்ந்து வரலாம். அடுத்தவனோடு போட்டிபோடவும் நமக்கு துணிவு, திறமை, வசதி இல்லாமல் இருக்கலாம். நல்லவர்கள் நாலுபேர் நமக்கு உதவி செய்ய முன்வராமலிருக்கலாம். கவலைப்பட வேண்டாம். மனம் சோர்ந்து போக வேண்டாம். தெய்வம் உன்னைத் தேடிவரும் நேரத்தில் தயாராக இரு. கடவுள் உன்னிடம் "நலம்பெற விரும்புகிறீரா?" என்று கேட்கும்போது உன் உடலும் உள்ளமும் தயாராக இருக்கட்டும். எத்தகைய நோயோடு, குறையோடு, தேவையோடு இருந்தாலும் நம் இயேசு நமக்குத் தருவார் என்ற நம்பிக்கை கொள்வோம். தயாராக இருப்போம்.

மறையாசிரியர் - ஜெ.அலெக்ஸ்

# கைது செய்த இத்தாலியர்களை விடுவிக்க நிபந்தனை



(புதுடில்லி)

ஒரிசாவிற்கு சுற்றுலா வந்த இத்தாலியைச் சேர்ந்த் இருவர், மாவோயிஸ்ட்களால் கடத்தப்பட்டனர். அவர்களை விடுவிக்க மாவோயிஸ்ட்கள் பல நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது, இத்தாலியில் இருந்து சுற்றுலா வந்த பாசஸ்கோ பாவ்லோ மற்றும் கிளாடியோ கோலாஞ்செலோ என்ற இருவர், காந்தமால் மற்றும் கஞ்சம் மாவட்ட எல்லையில் உள்ள மலையேற்றத்திற்காகவும், மலைப் பகுதியைச் சுற்றிப் பார்க்கவும் சென்றிருந்தனர். அப்போது அவர்கள் இருவரும் மாவோயிஸ்ட்களால் கடத்தப்பட்டனர். புரி நகரிலிருந்து காரில் வந்த அவர்கள், மாவோயிஸ்ட்கள் ஆதிக்கம் நிறைந்த வனப்பகுதிக்குள் எச்சரிக்கையை மீறிச் சென்றுள்ளனர். அவர்களுடன் காரின் சாரதியும் சமையற்காரர் ஒருவரும் உடன் சென்றுள்ளனர். ஆனால், அவர்கள் இருவரையும மாவோயிஸ்ட்கள் விடுவித்து விட்டனர். கடந்த 14ஆம் திகதியே அவர்கள் இருவரும் கடத்தப்பட்ட போதிலும், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் தான் தனியார் செய்தி சேவை ஒன்றின் மூலமாக, இத்தாலி சுற்றுலா பயணிகளை தாங்கள் கடத்தியிருப்பதாக மாவோயிஸ்ட்கள் தகவல் தெரிவித்தனர். இது குறித்து ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக் கூறுகையில், இத்தாலிய சுற்றுலாப் பயணிகளை கடத்திய மாவோயிஸ்ட்களுடன், சட்டத்திற்கு உட்பட்டு எந்த விதமான பேச்சு வார்த்தையும் நடத்தத் தயார். சுற்றுலாப் பயணிகளை உடனே விடுவிக்க வேண்டும் என மாவோயிஸ்ட்களை கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

# 24 மணிநேரத்தில் மாற்றம் காணும் நிலை

(புதுடில்லி)

ஒரு சபையில் உருவாக்கப்பட்ட திட்டம், 24 மணி நேரத்தில் அடுத்த சபையில் மாற்றம் செய்யப்படும் நிலையை அனுசரித்து உருவாக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் என்று குறிப்பிட்டார் பிரணாப் முகர்ஜி.

அதிக வரிகள் கொண்ட, எதிர்பார்த்த சீர்திருத்தங்கள் இல்லாத வகையில் 2012-2013ஆம் ஆண்டுக்கான மத்திய வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இந்தியச் செய்திகள்

வரவு செலவுத் திட்டம் குறித்து நேற்று முன் தினம் தொழில் துறை அதிபர்கள் கூட்டத்தில், மத்திய நிதியமைச்சர் பிரணாப் வெளிப்படையாக பல கருத்துக்களைத் தெரிவித்தார்.



அவர் மேலும் கூறியதாவது; மத்திய வரவு செலவுத்திட்டம் உருவாக்கியதில் அதிக கவனம் காட்டினேன். நாடாளுமன்றில் உள்ளவர்கள் என்ன கூறுவர் என்ற எண்ணம், என் சகாக்கள் விஷயத்தில் அதிக கவனம் தேவை என்ற எச்சரிக்கை, எது அவர்களை எதிர்க்கச் செய்யும் என்பதையெல்லாம் ஓரளவு கணித்து முடிவு செய்து, வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அதைத் தவிர, ஒரு சபையில் உருவாக்கப்பட்டு ஏற்கப்படும் விஷயம், அடுத்த சபையில் 24 மணி நேரத்தில் மாற்றம் செய்யப்படும் நிலைமை இருப்பது இன்றைய நிலை. அதையும் நான் யோசிக்க வேண்டியதாயிற்று எனத் தெரிவித்துள்ளார்.

# நித்தியானந்தா காணொளி நிஜம்; தடயவியல் நிபுணர் உறுதிப்படுத்தினார்

நித்யானந்தாவுடன் நடிகை ரஞ்சிதா காணப்பெற்ற காணொளி உண்மை என்றும் அதில் தொழில்நுட்பத்தால் ஏதுவும் செய்யப்படவில்லை எனவும் பெங்களூரில் உள்ள தடயவியல் நிபுணர் பி.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ரஞ்சிதாவும் நானும் சேர்ந்து இருக்கும் காணொளி உண்மை இல்லை. மோர்பிங் மூலம் உருவாக்கப்பட்டது என்று அமெரிக்க நிபுணர்கள் கூறியுள்ளதாக சுவாமி நித்யானந்தா, சென்னையில் கடந்த 13 ஆம் திகதி தனது சீடர்கள் மற்றும் நடிகை ரஞ்சிதாவுடன் வந்து ஊடகங்களுக்கு பேட்டி கொடுத்தார். இந்நிலையில், சர்ச்சைக்குரிய அந்த காணொளி குறித்து பெங்களூரில் உள்ள தடயவியல் நிபுணர் பி.சந்திரசேகர் கூறியதாவது, கடந்த 2010இல் ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தை சேர்ந்தவர்கள் என்னை தொடர்பு கொண்டனர். நித்யானந்தாவும் நடிகை ரஞ்சிதாவும் உள்ள காணொளி உண்மையானதா? அல்லது மோர்பிங் செய்யப்பட்டதா என்று கேட்டனர். நான் அந்த காணொளியை ஆய்வு செய்த பின்னர், உண்மையானது என்றும் இதில் ஆள்மாறாட்டம் ஏதும் இல்லை எனவும் அறிக்கை கொடுத்தேன் எனத் தெரிவித்துள்ளார்.



# இந்தியாவில் வறுமையை ஒழிக்க உலக வங்கி கடன் வழங்குகின்றது

இந்தியாவில் வறுமையை ஒழிக்கும் பொருட்டு, உலகவங்கி 4.3 பில்லியன் அமெரிக்கா டொலர்களை நிதியுதவியாக வழங்கவுள்ளதாகத்தெரிவித்துள்ளது. இந்தியாவில் வறுமையை ஒழிக்கும் பொருட்டு பல்வேறு தன்னார்வ அமைப்புகளும் நிறுவனங்களும் போராடி வருகின்றன. இருப்பினும் வறுமை ஒழிந்த பாடில்லை என்பதே நிதர்சமான உண்மை.

இந்நிலையில் உலக வங்கி, இந்தியாவிற்கு 4.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியுதவியாக வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது. இந்த நிதி வறுமையை ஒழிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட உள்ளது.

# தனிப்பட்ட இரகசியங்களை விற்கும் அமைப்பு மையங்கள்

பிரிட்டன் மக்களின் தனிப்பட்ட இரகசியங்களை இந்தியாவில் உள்ள அழைப்பு மையங்கள் விற்பனை செய்வதாக பிரிட்டன் பத்திரிகைகள் குற்றம் சாட்டியுள்ளன. இதுகுறித்து பிரிட்டனின் இரண்டு பத்திரிகைகள் ஆய்வுகளை மேற்கொண்டன. பிரிட்டனின் புகழ்பெற்ற வங்கிகள் அனைத்தும் தனது வர்த்தகப் பணிகளை இந்தியாவில் செயற்படும் அழைப்பு மையங்களிடம் கொடுத்துள்ளது. இதன் ஊடாக பிரித்தானியர்களின் கடன் அட்டைகளின் ஆரம்ப திகதி மற்றும் காலாவதியாகும் திகதி விவரங்கள், மருத்துவ அறிக்கைகள், தனிப்பட்ட நபரின் பெயர்கள், விலாசம், கைத்தொலைபேசி எண் போன்றவை உட்பட 45 வகையான விவரப் பட்டியல்கள் இந்தியாவை சேர்ந்த நபர்கள் மூலம் வெளியிடுவதை அம்பலப்படுத்தியுள்ளது. ஆய்வுகளின்படி பிரிட்டன் மக்களின் சுமார் 5 இலட்சம் பேர்களின் தனிப்பட்ட இரகசியங்கள் வெளியிடப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றது. 5 பில்லியன் டொலர்கள் அளவிற்கு அழைப்பு மையத்துறையில் இந்திய நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளது. இந்நிறுவனங்களில் சுமார் 3 இலட்சத்து 30 ஆயிரம் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

# ஆப்கான் பெண்ணுடன் ராகுல் காந்தி



ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த அழகான பெண்ணுடன் ராகுல்காந்தி பிரான்ஸில் ஊர் சுற்றியதாக ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணிய சுவாமி தெரிவித்துள்ளார். இது குறித்து ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணிய சுவாமி டுவிட்டரில் வெளியிட்டுள்ளதாவது, ராகுல் காந்தி இப்போது அழகான ஒரு காரியத்தை செய்து கொண்டிருக்கிறார்.

இத்தாலியில் குடியுரிமை பெற்ற, ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த முஸ்லிம் பெண் ஒருவருடன் அவர் ஊர் சுற்றி வருகிறார். சமீபத்தில் இவர்கள் இருவரும் பிரான்ஸில் காணப்பட்டதாகவும் அந்தப் பெண்ணின் கையில் திருமண மோதிரம் பளிச்சிட்டது என்றும் சுவாமி கூறியுள்ளார்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................


கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# வடகொரிய ஏவுகணையை ஜப்பான் அழிக்குமாம்



வடகொரியா ஏவுகணைப் பரிசோதனை செய்யத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

வடகொரியா ஏவுகணைப் பரிசோதனையை நடத்த உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், ஜப்பானும் வடகொரியாவின் ஏவுகணைத் தயாரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. மேலும் வடகொரியா இந்தப் பரிசோதனைத் திட்டத்தில் ஈடுபட்டால் கடந்த 2009 ஆம் ஆண்டில் வட கொரியா ஏவிய ஏவுகணையை ஜப்பான் அழித்ததைப் போல தற்போதும் நடைபெறும் என்று ஜப்பான் எச்சரித்துள்ளது.

வடகொரியாவின் புதிய தலைவராக கிம் ஜோங் உன் பதவி ஏற்றவுடன் பல மாற்றங்களை எதிர்பார்த்த அமெரிக்கா, தற்போது அதிர்ச்சியடைந்துள்ளது. ஏனெனில் ஐ.நா சபையின் தீர்மானங்களுக்கு எதிராக வட கொரியா தனது ஏவுகணைப் பரிசோதனையை நடத்த திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் அமெரிக்கா, வடகொரியாவுக்கு செய்வதாக இருந்த உணவுப்பொருள் உதவிகளை செய்ய மறுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

# இனம் தெரியாத நபர்களால் அமெரிக்க ஆசிரியர் படுகொலை

ஏமன் நாட்டில் ஆசிரியராக பணியாற்றி வந்த அமெரிக்கரை, அல்-கொய்தா தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றுள்ளனர்.


அரேபியா வளைகுடா நாடான ஏமன் தலைநகர் சானாவிலிருந்து 200 கிலோ மீற்றர் தொலைவில் தைஸ் என்ற நகர் உள்ளது. அங்குள்ள ஸ்வீடிஸ் தொழில் நுட்ப பள்ளிக்கூடத்தில் அமெரிக்காவை சேர்ந்த ஜோயல் ஷேர்ன்(வயது -29) என்பவர் ஆங்கில பாடம் நடத்தும் ஆசிரியராக பணியாற்றி வந்தார். ஜோயலும், மற்றொருவரும் நடந்து சென்று கொண்டிருந்த போது மோட்டார்



சைக்கிளில் வந்த 2 பேர் துப்பாக்கியால் சுட்டு விட்டு மின்னல் வேகத்தில் தப்பி சென்று விட்டனர். இந்த சம்பவத்தில் அமெரிக்க ஆசிரியர் ஜோயல் ஷேர்ன் உயிரிழந்தார்.

இந்நிலையில் இந்தத் தாக்குதலை நடத்தியது அல்-கொய்தாவுடன் தொடர்புடைய தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுகிறது. அப்பகுதியிலுள்ள முஸ்லிம்களுக்கு எதிராக ஜோயல் நடந்து கொண்டதன் விளைவாக இந்தப் படுகொலை நடந்திருக்கலாம் என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# ஜேர்மனியின் புதிய ஜனாதிபதி தெரிவு




ஜேர்மனியின் புதிய ஜனாதிபதியாக மனித உரிமை ஆர்வலர் மற்றும் லூத்தரன் திருச்சபை பாதிரியாரான ஜோசிம் கவும்(வயது- 72) தெரிவு செய்யப்பட்டார். இவர் தன்னை எதிர்த்து போட்டியிட்ட பீடேகிளார்ஸ்பெல்ட் என்பவரை வெற்றி கொண்டார். மொத்தம் உள்ள 1,232 வாக்குகளில் கவுக்குக்கு 991 வாக்குகள் கிடைத்தன.

கடந்த மூன்றாண்டுகளில் ஜனாதிபதி பதவிக்கு தேர்தல் நடைபெறுவது இது மூன்றாவது முறையாகும். இதற்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த கிறிஸ்டியன் உல்ப் ஊழல் புகார் காரணமாகவும், ஹொர்ஸ்ட் கோச்லர் அரசியல் எதிர்ப்பு காரணமாகவும் பதவி விலகியுள்ளனர். மேலும் இரண்டு ஜேர்மனி நாடுகளும் ஒன்றாக இணைந்த பின்னர் கிழக்கு ஜேர்மனி பகுதியை சேர்ந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். இந்த வெற்றி குறித்து புதிய ஜனாதிபதி ஜோசிம் கவும் கூறுகையில், கிழக்கு ஜேர்மனியில் நடைபெற்ற முதல் சுதந்திரமான தேர்தலின் 22 ஆவது ஆண்டில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவது சிறப்பம்சமாகும் என்று தெரிவித்தார்.

# செய்தியாளர்கள் விடுதலை





சுவிட்சர்லாந்தின் மத்திய தொழில்நுட்ப மையமும், சிங்கப்பூரின் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையும் இணைந்து உலகச் சுற்றுப்புறச் சூழலின் நிலைத்தன்மையை ஆராய்வதற்காக சிங்கப்பூர்-ஈ.டி.ஹெச்(Singapore-ETH) நிலையத்தை ஆரம்பித்துள்ளது.

இதனைத் தொடக்கி வைத்துப் பேசிய சுவிட்சர்லாந்தின் உள்விவகாரத்துறை அமைச்சரான அலைன் பெர்செட், இந்தப் புதிய நிலையம் சுவிஸ ஸின் மத்திய தொழில்நுட்ப மையத்தின் சர்வதேச தகுதிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் என்றார். இந்த விழாவில் சிங்கப்பூரின் சுற்றுப் புறச் சூழல் மற்றும் நீராதாரங்கள் துறையின் அமைசசரான விவான் பாலகிருஷ்ணனும் கலந்துகொண்டார்.

# அணு சக்தி தொடர்பில் ஜப்பானில் விரைவில் மாற்றம்

ஜப்பானின் புகுஷிமா அணு உலை விபத்தால் அதிர்ச்சியடைந்த ஜப்பான் மக்கள், தங்களுக்கு அணு சக்தியே தேவையில்லை என்று கூறியுள்ளனர்.

நிலநடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக ஜப்பானின் புகுஷிமா அணு மின் நிலையத்தில் ஓராண்டுக்கு முன் விபத்து ஏற்பட்டது. இதனால் அணு மின் நிலையத்தைச் சுற்றியுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இதனையடுத்து அந்நாட்டில் உள்ள அணு மின் நிலையங்களின் பாதுகாப்பை ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் அணுசக்தி தேவையா என்பது குறித்து நாளிதழ்கள், தொலைக்காட்சி சனல்கள இணைந்து பொதுமக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தின.

3,000 பேரிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வில், 80 சதவிகிதம் பேர் அணு சக்தி தேவையில்லை என்றும், 16 சதவிகிதம் பேர் அணு சக்தி தேவை என்றும் கூறியுள்ளனர். மின் பற்றாக்குறையைச் சமாளிக்க குறுகிய காலத்துக்கு மட்டும்(மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை) அணு உலைகளை செயற்படுத்தலாம் என்று 53 சதவிகிதம் பேர் தெரிவித்துள்ளனர். ஜப்பான் பிரதமர் யோஷிகிஹோ நோடா இந்த ஆண்டின் இறுதியில் எரிசக்திக் கொள்கையில் மாற்றம் கொண்டு வரவுள்ளார். அதில் அணுசக்தியைச் சார்ந்துள்ள நிலையைக் குறைத்துக் கொள்ளும் கொள்கை முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது.

# பதிவிறக்கப் பெட்டகம்

இராணுவ அணிவகுப்பு போல எல்லோரும் ஒரேவிதமாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிற உலகில் எப்படி வாழ முடியும்? வேறுபட்ட மனிதர்கள், மாறுபட்ட மொழிகள், பண்பாடுகள் கொண்ட வாழ்க்கைக்கு நாம் இன்னும் நம்மை பழக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. எப்படி வண்ண வேறுபாடுகள் அழகுக்குரியதாகிறதோ அதுபோலவே கருத்து வேற்றுமைகளும் நம் மனங்களின் அழகுதான். **– அசோகமித்திரன்**

அமெரிக்காவின் மனித உடல்களை அழித்தல் பின்லேடனுக்கும், ஆப்கான் உடல்களை அழித்தல் அமெரிக்காவுக்கும் தத்தம் கருத்தியலின்படி நியாயமாகி விடுகின்றன. இன்றைய சமூக அமைப்பே ஒவ்வொரு மனித இருப்பின் மீதும் கொண்டிருக்கும் உயிர்சிதைக்கும் ஆற்றலின் மூலம் மட்டுமே தன்னை நிலைப்படுத்திக் கொண்டிருக்கிறது. நம் சமூக மதிப்பீடுகள் அனைத்தும் பேரழிவுகளை நோக்கியே நகர்ந்து வந்திருக்கிறது. எனவே, அதன் மூலகங்கள் அனைத்துக்கும் எதிரான புதிய அறிவியல் ரீதியான மதிப்பீடுகளை உருவாக்குதலே இன்றைய தேவை. **– பிரேம்**

"இயற்கையானது", "இயல்பானது" என்று சாதாரணமாக விவரிக்கப்படுபவை அனைத்திற்கும் வரலாறுகள் இருக்கின்றன. அந்த வரலாறுகளை அகழ்ந்தெடுப்பதன் மூலம், விவரித்து சொல்வதன் மூலம் அவை இயற்கையானவையோ, இயல்பானவையோ இல்லை எனக் கட்டவிழ்க்கலாம். இருப்பினும் "மனித இயல்பு" வன்முறையானது, அது "இயற்கையான" அதிகாரத்திற்கான உந்துசக்தியின் விழைவு என்பது நீட்ஷேயிடம் உருவான கருத்து. இதைக் கட்டவிழ்ப்பது என்பது தத்துவத்தின் சவாலான, சிக்கலான பிரச்சினைகளுள் ஒன்று. குழந்தைகளின்/குழந்தைகளுக்கான கதைகள், விளையாட்டுகள் ஆகியனவற்றையும் அவை சார்ந்த இலக்கியங்களையும் விவாதித்தால் ஒருவேளை வழி புலப்படலாம். **– எம்.டி.முத்துக்குமாரசாமி**

கலைஞர்கள், எழுத்தாளர்கள் உண்மையில் நிரந்தரமான கலகக்காரர்களாகவே இருக்க முடியும். ஏனென்றால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட எதையும் அவர்களால் முழுக்க ஏற்றுக்கொள்ள முடியாது. தனிமனித ஒழுக்கத்திலிருந்து நம்மை வழி நடத்தும் சிந்தனைப் போக்குகள் வரை எல்லாவற்றையும் தொடர்ந்து கேள்விக்குட்படுத்தியபடி உடைத்துக் கலகக்குரல் எழுப்புவதுதான் இலக்கியக்காரனின், படைப்பாளனின் இயல்பாக இருக்க வேண்டும். இதுதான் இன்றைய எல்லோரதும் போககாக, அங்கீகரிக்கப்படும் முற்போக்காக இருக்கிறது என்று கருதி, அந்த வெள்ளத்தில் நானும் முன்னுக்கு நீந்திக் கொண்டிருக்கிறேன் என்று காட்டிக் கொள்வதில் எந்த கலக நியாயமும் இல்லை. கலக பாவனை தான் இங்கே மிகுதியாக இருக்கிறது. இன்று பரவலாக உள்ள ஒரு கருத்தின் மீது ஆழமான சந்தேகம் ஏற்பட்டால் அதை வெளியிட்டு விவாதிக்கும் துணிச்சல் அற்றவர்களாகவே பெரும்பான்மைப் படைப்பாளிகளும் புத்திஜீவிகளும் உள்ளார்கள். அப்படி வெளியிட்டு விட்டால் இங்குள்ள பொதுநீரோட்டத்திலிருந்து தனிமைப்பட நேரும் என்ற பயத்தில் ஊரோடு ஒத்தோட வாய்திறக்கிறவர்கள்தான் இங்கு முன்னணிக் கருத்து வெளியீட்டாளர்களாக உள்ள அனைவருமே. **– அரவிந்தன்**

மனித வாழ்வின் மீது அக்கறை கொண்ட எவ்வளவு சிறந்த அரசியல் நெறியாக இருந்தாலும் அங்கே அதிகாரம் என்பது சேகரமாகி அடக்குமுறைக்கு வழி வகுத்து விடுகிறது. அதே போல், மனித உறவுகளிலும் அன்பு, பாசம், காதல் என்று எத்தனை விதமாகப் பெயர் சொல்லி அழைத்தாலும் அதனூடே அதிகாரமானது மாறு வேடத்தில் புகுந்துவிடுகிறது. கேத்தி ஆக்கரும், வில்லியம் பர்ரோஸும் ஏன் தங்கள் உடலையே பரிசோதனைக் கூடமாக மாற்றிக் கொண்டார்கள்? அதிகாரம் என்பது நமது வாழ்வின் அத்தனை அம்சங்களிலும் மிக நுண்மையாக ஊடாடி இருக்கிறது. மொழியிலிருந்தும் சிந்தனயிலிருந்துமே அது துவங்குகின்றது. அந்த அதிகாரக் கட்டமைப்பைக் கூறுகூறாகப் பிரித்துப் போடுவதே நான்–லீனியர் எழுத்து முறை. **– நேநோ**

ஜெயலலிதா மிகவும் விநோதமானவர். தனக்கு இவ்வளவு பெரிய வெற்றியை அளித்த மக்களுக்கு அவர் ஏன் இவ்வளவு பெரிய தண்டனையை உடனடியாக வழங்குகிறார் என்பதைப் புரிந்து கொள்வது கடினம். ஒரு ஜனநாயக அமைப்பில் ஓர் அரசாங்கத்திற்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறது என்பதைப் பெரும்பாலும் நம்மால் தெளிவாகப் பார்க்க முடியாது. சர்வாதிகார அமைப்புகளைப் போல அது தெளிவானதல்ல. புகைமூட்டமானது. ஆனால் ஜெயலலிதா ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு முறையும் ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் எந்தவித வித்தியாசமுமில்லை என்பதை நிரூபித்துக் காட்டுவதின் வழியாக நமது அரசியலமைப்பு எவ்வளவு அதிகாரமிக்கது என்பதை நமக்குப் புரிய வைக்கிறார். நாம் ஓர் உண்மையான சர்வாதிகாரத்தை எதிர்கொள்ளும்போது நமக்கு எந்த அதிர்ச்சியும் இருக்காது என்றே தோன்றுகிறது. **– மனுஷ்யபுத்திரன்**

அமெரிக்கா ஆரம்பத்தில் பிரேரணை சற்று அழுத்தமாக வரவேண்டும் என்பதற்காகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவின் ஆலோசனையின் பேரில் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை முழுமையாக நிராகரித்து 105 பக்க அறிக்கையினை வெளியிட்டது. கூட்டமைப்பின் வரலாற்றில் அது மேற்கொண்ட உருப்படியான பணி என அது புகழப்பட்டது.

அந்த அறிக்கை கூட்டமைப்பினால் வரையப்பட்டதல்ல. அதற்கான ஆற்றலோ, பொறுமையோ, விருப்பமோ கூட்டமைப்பிடம் கிடையாது. அமெரிக்காவின் வேண்டுகோளின் பேரில் அமெரிக்கா சார்பு அரசுசார்பற்ற நிறுவனம் ஒன்று அதனை எழுதிக்கொடுத்ததாகவே தகவல்.

தற்போது முழுமையாக நிராகரித்த இலங்கை அரசிற்குப் பணிந்து போதல், இந்தியாவிற்கும் பணிந்து போதல், அமெரிக்காவிற்கும் பணிந்து போதல் என்பதுதான் கூட்டமைப்பின் போக்காக இருப்பதால் என்றைக்குமே அதனால் சிறந்த தலைமையாக இருக்க முடியாது.

அது ஜெனிவாவிற்கு செல்லாமை, அது தொடர்பான அறிக்கையை விட்டு பின்னர் இலங்கை அதனைப் பயன்படுத்த இடங்கொடுத்தமை, நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையினை முதலில் நிராகரித்து விட்டு பின்னர் ஏற்றுகொண்டமை என ஒன்றன் பின் ஒன்றாக அடுத்தடுத்து தவறுகளை விட்டுக்கொண்டேயிருக்கின்றது.

இத்தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக வீ.ரி.தமிழ்மாறன் தவறுகளுக்கு கொள்கை விளக்கம் கொடுக்க சுருக்கமாகக் கூறினால் தனது நலன்களுக்கான கருவி என்பதற்குமேல் தமிழ் மக்களின் அபிலாசைகள் வளரக்கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றது. இது விடயத்தில் இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் ஒருமித்த கருத்து இருக்கின்றது.

பிரேரணையில் தமிழ் மக்கள் மகிழ்ச்சியடையக்கூடிய விடயங்கள் எதுவும் இல்லை. நல்லிணக்க ஆணைக்குழு மேம்போக்காகக் கூறிய விடயங்களையே பிரேரணை பெரிதாக உயர்த்திப் பிடிக்கின்றது. சிவில் நிர்வாகம், உயர்பாதுகாப்பு வலயத்தினைக் குறைத்தல், அரசியல் தீர்வு என்பவை பற்றி நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மேம்போக்காகவே கூறியுள்ளது.

இவ்வாறான மேம்போக்கான கருத்துக்களை பதவிக்கு வருகின்ற எல்லா

கூட்டமைப்பு ஜெனிவா விவகாரத்தினால் தற்போது தெளிவாக இரண்டாகிப் போயுள்ளது. தமிழரசுக் கட்சிக்காரர் சம்பந்தன் தலைமைக்கு வெள்ளையடிக்க முயற்சிக்கின்றனர். இந்தப் பணியில் தமிழ்த் தேசியம், சுயநிர்ணயம் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் உள்ளடக்கம். சம்பந்தன் தலைமையோடு மோதினால் அடுத்த தடவை ரிக்கற் கிடைக்காது என்ற அச்சம் அவருக்கு. கூட்டமைப்பிலுள்ள எந்தவொரு கட்சியினதும் அடையாளத்தையும் பெற்றிராத அவர் தமிழரசுக் கட்சியுடனேயே வலிந்து தன்னை அடையாளப் படுத்த முயற்சிக்கின்றார். கிளிநொச்சி மாவட்டத்தில் ஆனந்தசங்கரி அவருக்கு வில்லனாக இருப்பதால் கொள்கைகளையெல்லாம் கைவிட்டு தமிழரசுக்கட்சியுடன் ஒட்டிக்கொண்டிருப்பதைத் தவிர

# உண்மையான "தமிழ்த் தேசியத் தலைவர்கள்" மூவர்தான்!

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைக்குள்ளேயே தமிழ்மக்களின் அபிலாஷைகள் இருக்கின்றது என சம்பந்தன் கதைவிடுவது வேறுகதை.

தான் கொண்டு வரும் பிரேரணைக்கு தமிழ்மக்களின் ஆதரவு இருக்கின்றது. அவர்களின் நலன்களுக்காகத்தான் இது கொண்டுவரப்படுகின்றது என்பதை வெளிப்படுத்துவதற்கே அமெரிக்கா கூட்டமைப்பினை தனது நாட்டிற்கு அழைத்தது. கூட்டமைப்பு ஜெனிவாவிற்கு வருவதையும், ஆரம்பத்தில் அமெரிக்கா விரும்பியிருந்தது. எனினும் பின்னர் பிரேரணையின் கனதி குறைக்கப்பட்டதினால் கூட்டமைப்பு ஜெனிவாவிற்கு வருவதை அமெரிக்காவும் விரும்பவில்லை.


இங்கு பிரேரணையின் கனதி குறைக்கப்பட்டமைக்கு அமெரிக்காவினைக் குறை சொல்லிவிட முடியாது. எந்த நாடும் தன்னுடைய நலன்களிலிருந்துதான் செயற்படும். அமெரிக்காவின் இலக்கு தமிழ் மக்களுக்கு ஆரோக்கியமான அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதல்ல. மாறாக இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை இல்லாதொழிப்பதே! ஆனால் தனது செயற்பாட்டிற்கு தமிழ் மக்களின் விவகாரத்தையே கருவியாகப் பயன்படுத்தியது.

இந்த இடத்தில்தான் அமெரிக்காவின் நலன்களுக்குள் தமிழ் மக்களின் நலன்களையும் பேரம்பேசி இணைக்கக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது. கூட்டமைப்பு இச்சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தவில்லை என்பதுதான் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய துயரம்.

ஒரு தலைமையின் சிறப்பு நிகழ்வுகளுக்குப் பின்னால் இழுபட்டுச் செலவதல்ல. இழுபட்டுச் செல்வதற்கு ஒரு தலைமை வேண்டியதில்லை. மாறாக நிகழ்வுகளை சவாலாக எடுத்து தனது மக்களின் அபிலாசைகளை அதற்குள் உட்புகுத்தும் ஆற்றலிலேயே தலைமையின் சிறப்பு தங்கியுள்ளது. கூட்டமைப்பு இதனைக் கோட்டைவிட்டுள்ளது.

முற்படுகின்றார். வழக்கறிஞர் விரும்பாததினால் கூட்டமைப்பு ஜெனிவாவிற்கு செல்லவில்லை எனக் கூறுகின்றார். கட்சிக்காரருக்கு செயற்படுவதாகக் கூறிக்கொண்டு வழக்கறிஞர் தன்னுடைய நலன்களுக்காக மட்டும் செயற்படுகின்றார். இது வெட்டவெளிச்சமாகத் தெரிந்தபின்னரும் கட்சிக்காரர் மௌனமாக இருக்கவேண்டுமா? என்பதற்கு தமிழ்மாறனிடம் பதில் எதுவும் இல்லை.

புலமையாளர்களின் பணி அரசியற் கட்சியின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதல்ல. மாறாக சரியான வழியில் கட்சியினைக் கொண்டு நிறுத்துவதே!





இங்கு தமிழ்மாறனும் தவறிழைக்கின்றார் போலவே தெரிகின்றது.

பிரேரணை விடயத்தில் அமெரிக்காவின் இலக்கு மிகவும் தெளிவானது. அதன் பிரதான இலக்கு சீனாவின் செல்வாக்கினை இலங்கையிலிருந்து அடியோடு அகற்றுவது. இந்த இலக்கினை மகிந்தர் அரசினைப் பணிய வைப்பதன் மூலம் அல்லது ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதன் மூலம மேற்கொள்ளப் பார்க்கின்றது. தன்னுடைய இந்த இலக்கிற்கு இடைஞ்சல்கள் வரக்கூடாது என்பதற்காக தமிழர்களின் அபிலாசைகளை 13ஆவது திருத்தத்துடன் சுருக்கி விட முயற்சிக்கின்றது.

மகிந்தர் அரசு பணிந்தால் அல்லது ஆட்சி மாற்றத்தின் மூலம் புதிய அரசு உருவானால் அந்த அரசுகளுக்கு சங்கடம வரக்கூடாது என்பதற்காகவே இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

அரசுகளும் கூறுவது வழக்கம்தான். இவற்றை எப்படி அமுல்படுத்துவது? அதற்கான பொறிமுறை என்ன? என்பது பற்றி அறிக்கை எதுவும் கூறவில்லை. குறிப்பாக அரசியல் தீர்வு ஒற்றையாட்சிக்குள்ளா? சமஷ்டி ஆட்சி அடிப்படையிலானதா? என எதுவும்

**- முத்துக்குமார் கட்டுரையிலிருந்து**

கூறவில்லை. அமெரிக்காவின் பிரேரணையும் இவைபற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

அமெரிக்கப் பிரேரணையில் கொஞ்சமாவது திருப்திப்படக்கூடிய விடயம் ஐ.நா மனிதவுரிமைக் கவுன்சிலின் பொறிமுறைக்குள் இலங்கையை கொண்டு வரும் அதனது மூன்றாவது யோசனைதான். இலங்கைக்கு மிகவும் பிரச்சினையாகவுள்ள விடயமும் இது மட்டும்தான். அதனை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற நோக்கில் இலங்கை நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான வரைபடத்தை ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் சமர்ப்பிப்பதன் மூலம் பிரேரணை அவசியமற்றது என வாதிட முயற்சிக்கின்றது.

அமெரிக்கா பிரேரணையைக் கொண்டுவரும் போது இலங்கை அரசு தப்பித்துக் கொள்வதற்கும் இடம கொடுத்திருக்கின்றது. ஐ.நா நிபுணர் குழு அறிக்கையினை நடைமுறைப் படுத்தும்படி கோரியிருந்தால் இலங்கை அரசு தப்புவதற்கு இடமிருந்திருக்காது.

அவருக்கு வேறு தெரிவில்லை. பதவிக்கு முன்னால் நிற்கும் வலிமை கொள்கைக்கு இல்லை.

கூட்டமைப்புக்குள் ஏற்பட்ட விரிசல்களைப் பகிரங்கப்படுத்தும் வகையில் தனித்தனி பத்திரிகையாளர் மநாடுகளும் யாழ்ப்பாணத்தில் கூட்டப்படுகின்றன. தமிழரசுக்கட்சி வேறாக பத்திரிகையாளர் மாநாட்டினைக் கூட்டியுள்ளது. இம்மாநாட்டில் மாவை சேனாதிராஜாவும், சுமந்திரனும், சிறீதரனும் மட்டுமே கலந்துகொண்டிருந்தனர். கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளிலுள்ள எவரும் கலந்துகொள்ளவில்லை. சம்பந்தனின் தலைமைக்கு வலிந்து வெள்ளைப் பூச்சு அடிக்க அந்த மாநாட்டில் முயறசிக்கப்பட்டது.

சுரேஷ் பிரேமச்சந்திரன் தனியாக பத்திரிகையாளர் மாநாட்டினை நடாத்தி தனது பக்க நியாயங்களை கூறினார். அதன் மூலம் கூட்டமைப்பின் துரோகங்களில் தனக்கு பங்கில்லை என்பதை தெளிவாக வேறுபடுத்திக் காட்டினார்.

கூட்டமைப்பினர் மத்திய அரசிற்குப் பயந்து தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் உறவுகளை வைத்துக் கொளவதில்லை. அந்த மரபினை சுரேஷ் பிரேமச்சந்திரன் உடைத்திருக்கின்றார். பெங்களூர், மும்பாய் என போராட்டம் வளர்வதற்கும், மலேசியத் தமிழ்த் தலைவர்கள் இதுவிடயத்தில் செலுத்தும் அக்கறைகளுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார். சுரேஷ் பிரேமச்சந்திரன் அண்மைக்காலத்தில் கூறும் கருத்துக்களும், அது தொடர்பான செயற்பாடுகளும் மிகவும் முன்னேற்றகரமானவை. அவர் வலுவான தலைவராக எழுச்சியடைய முடியும்.

ஜெனிவா விவகாரம் தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கூறிய தமிழ்த் தலைவர்கள் மூவர்தான். ஒருவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றையவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மூன்றாமவர் மனோ கணேசன். இந்தப பொறுப்புணர்வும், துணிவும் சம்பந்தன் தலைமைக்கு வரவில்லை. இது மிகவும் துயரத்திற்குரியது.

# இலங்கை மேற்கிடம் வீழ்வதை இந்தியா விரும்பவில்லை!

இலங்கை தொடர்பான விசயத்தில் அமெரிக்கா இந்தக் காலப்பகுதியில் நிறையப் பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறது. தன்னுடைய விருப்பங்களை இலகுவில் நிறைவேற்றிக் கொள்ள முடியாத ஒரு நிலையிலான பின்னடைவு. இதைச் சரிக்கட்ட, முன்பு சரத் பொன்சேகாவைக் களத்தில் இறக்கியதைப்போல இப்போது போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் கருவியாக்கியிருக்கிறது.

ஆனால், அமெரிக்காவின் இந்த அணுகுமுறையானது உண்மையில் இலங்கைக்கான நெருக்கடி என்பதையும் விட இந்தியாவிற்கான நெருக்கடியாக அமைகிறது என்பதே இங்கே கவனிப்பிற்குரியது. இந்தியாவைப் பொறுத்தவரையில் இலங்கை மேற்கின் பக்கம் சாய்வதை அது பெரிதாக விரும்பவில்லை. மேற்கின் பக்கம் இலங்கை சாயுமாக இருந்தால் இந்தியாவிற்கான பிடியோ செல்வாக்கோ இலங்கையில் இப்போதைக்கு இருக்காது என்பது இந்தியாவுக்குத் தெரியும்.

இலங்கையில் மகிந்த ராஜபக்ஷவுக்குப் பதிலாக ரணிலோ சரத்தோ அல்லது மேற்குக்கு விருப்பமான பிரதிநிதியொருவரோ ஆட்சிக்கு வந்தால், சிங்களத்தரப்பும் மேற்குக்குச் சார்பாகிவிடும். தமிழர்களும் மேற்கோடு சார்ந்திருப்பார்கள். ஆகவே இந்தியா தனிமைப்பட்டு விடும். எனவே விருப்பங்களுக்கும் உடன்பாடின்மைகளுக்கும் அப்பால் மகிந்த ராஜபக்ஷ அரசைப் பாதுகாப்பதே இந்தியாவுக்கு இப்போதைக்குப் பரவாயில்லை என்றநிலை. இதற்குக் காரணம், தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கை என்ற கேந்திரத்தின் முக்கியத்துவத்தை இந்தியா இழந்து விடக்கூடிய அபாயமே அதனுடைய அச்சம்.


சீனாவுடன் ராஜபக்ஷ அரசு நெருக்கமாக இருந்தாலும் அது தனக்கு அதிக பாதிப்பைத் தராது என்று இந்தியா கருதுகிறது. இதற்குள் தன்னுடைய நலன்கள் பாதிக்கப்படாத ஒரு சமனிலையைத் தக்க வைதது்க் கொள்ளமுடியும் என்பது இந்தியாவின் நம்பிக்கை. அப்படியே அது தற்போதும் செயற்பட்டு வருகிறது.

அதாவது, இப்போதுள்ள நிலையின்படி சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் இலங்கை கடைப்பிடித்து வரும் ஒரு நிலையைப் பேணிக் கொண்டால் பரவாயில்லை என்ற நிலை இந்தியாவுக்குண்டு. இலங்கையில் மேற்கு செல்வாக்குச் செலுத்துவதையும் விட சீனாவின் செல்வாக்குப் பரவாயில்லை என்றே இந்தியா கருதுகிறது. இதற்குக் காரணம், மேற்குக்கு ஆதரவான சக்திகள் இலங்கையின் உள்ளே மிகச் சாதாரண மட்டங்களில் எல்லாம் உள்ளன. அதேவேளை சீனாவுக்குச் சார்பாக அவ்வாறான சக்திகள் இல்லை என்பது இந்தியாவின் அவதானிப்பு.

எனவே இந்த ஒப்பு நிலையில் மேற்கின் கை மேலோங்குவதை இந்தியா அதிகம் விரும்பவில்லை. எனவேதான் இலங்கையின் மீதான நெருக்கடிகளை இந்தியா அதிகம் விரும்பாமற் தடுக்கிறது. அப்படி ஒரு நெருக்கடி வருமானால் அது தனக்கு வரும் நெருக்கடி என்றே இந்தியா கருதுகிறது. இந்த யதார்த்தத்திற்குள்தான் இன்றைய இலங்கை மீதான போர்க்குற்றச் சாட்டுகளும் பிற எதிர் நடவடிக்கைகளும் அமையப்போகின்றன.

*- அரவிந்தன் கட்டுரையிலிருந்து*

# கல்வித்தரத்தை மீளக்கட்டியெழுப்ப ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்



(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இயல்பு சூழல் மீண்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இழந்துவிட்ட எமது கல்வித்தரத்தை மீண்டும் மேம்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இன்றுள்ள சந்ததியினருக்கு பூரணமான கல்வி அறிவை வழங்குவதனூடாக மீளவும் அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். அதற்காக அரசியல் பேதங்களுக்கு அப்பால் சமூகத்தின் மேம்பாட்டை முதன்மைப்படுத்தி செயற்பட சகல தரப்பினரும் முயற்சிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ். அராலி இந்துக்கல்லூரியின் விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ். மாவட்டம் கடந்த காலங்களில் அதிகமான கல்விமான்களை கொண்டிருந்தது. நாட்டில் கல்வியால் முன்நிலை வகித்த மாவட்டம் என்ற பெருமைக்குரிய மாவட்டமாகவும் திகழ்ந்தது. ஆனால் இன்று அந்த நிலைமை மாறிவிட்டது. ஏனெனில் கடந்த கால யுத்தம் இம்மாவட்டத்தின் கல்வித்தரத்திலும் கல்விமேம்பாட்டிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஒப்பிடுகையில் இன்று இம்மாவட்டம் கல்வித்தரத்தில் மிகப் பின்தங்கிய நிலைக்கு சென்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் யுத்த சூழலிலும் பல கல்லூரிகள் தமது கல்வித்தரத்தை தொடர்ந்தும் பாதுகாத்து வந்துள்ளன. அதனால்தான் இன்று கல்வியால் மேலெழுவதற்கான தளம் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இன்று யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு இயல்பு சூழல மீண்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இழந்துவிட்ட எமது கல்வித்தரத்தை மீண்டும் மேம்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும். இன்றுள்ள சந்ததியினருக்கு பூரணமான கல்வி அறிவை வழங்குவதனூடாக மீளவும் அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். அதற்காக அரசியல் பேதங்களுக்கு அப்பால் சமூகத்தின் மேம்பாட்டை முதன்மைப்படுத்தி செயற்பட சகல தரப்பினரும் முயற்சிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இங்கு உரையாற்றிய வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் பாலகிருஸ்ணன் (ஜீவன்) உரையாற்றுகையில், இப்பாடசாலையின் கல்வி தரத்தை மேம்படுத்துகின்ற பொறுப்பு மாணவர்களிடமும் பெற்றோர்களிடமுமே உண்டு. வளங்களையும் வசதிகளையும் எம்மால் ஏற்படுத்தித் தரமுடியும் ஆனால் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் பெற்றோர்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# பணிப் பகிஷ்கரிப்பை இடைநிறுத்த உத்தரவு

(கொழும்பு)

நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் ஆரம்பித்துள்ள பணிப் பகிஷ்கரிப்பை இடைநிறுத்துமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இரண்டு நோயாளர்கள் நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனுவைப் பரிசீலித்த கொழும்பு மாவட்ட நீதிபதி தம்மிக்க கனேபொல இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அரசாங்கம் தமக்கு இலவசமாக வழங்கும் சுகாதார சேவைகள் கிடைக்காமல் போயுள்ளதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை அரச மருந்தகங்களில் மருந்துப் பொருட்களை விநியோகிப்பதற்கு இராணுவத்தின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

அரச மருந்தாக்கல் நிறுவனத்தின் தலைவர் எச்.டி.ஜயரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டு, இராணுவத்தில் மருந்துப் பொருள் தொடர்பில் பயிற்றப்பட்டவர்களை மருந்துகளை வழங்குமாறு கோரி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ சேவை உதவியாளர்கள் தொடர்ந்து 6 ஆவது நாளாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள நிலையில், இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சினால், நோயாளர்களுக்கு மருந்து வழங்கும் பொறுப்பை, அரச மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மண்டைதீவுக்கு குடிநீர் விநியோகம்; வேலணை பிரதேச சபையும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக்கான குடிநீர் விநியோக நடவடிக்கையினை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினருடன் இணைந்து வேலணை பிரதேச சபையினரும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு திட்டமிட்டு வருவதாக தெரியவருகின்றது.

தற்சமயம் மண்டைதீவுக்கான குழாய் மூலமான குடிநீர் விநியோக நடவடிக்கையினைத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டு வருகின்றது. கடந்த வருடம் அல்லைப்பிட்டியில் இருந்து இவ்வாறு மண்டைதீவுக்கு குழாய் மூலமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை குடிநீர் விநியோக நடவடிக்கையினை ஆரம்பித்திருந்தது.

இருந்தும் இவ்வாறான குடிநீர் விநியோக நடவடிக்கை அப்பகுதி மக்களுக்கு போதுமானதாக இருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சீரான விநியோக நடவடிக்கை மேற்கொள்ளவும் அப்பகுதி மக்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோடை வெயில் உக்கிரமடைந்திருக்கும் நிலையில் குடிநீரின் தேவையும் அதிகரித்துள்ளது.

இவ்வாறான நிலையில் அப்பகுதி மக்களுக்கு போதியளவு குடிநீர் கிடைக்க தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினருடன் இணைந்து வேலணைப் பிரதேச சபையினரும் இணைந்து நடவடிக்கையில் ஈடுபடத் திட்டமிடப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இதுசம்பந்தமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர் பா.தவேந்திரகுமாருடன் வேலணை பிரதேச சபையினர் பேச்சுக்களில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இதற்கென வேலணை சாட்டிப்பகுதியில் குடிநீர் கிணறு ஒன்று புனரமைப்பு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

மேலும் வேலணை பிரதேச சபையினரிடம் குடிநீர் விநியோகத்திற்கு போதிய நிதிவளம் இல்லாத நிலையில் யுனிசெப் நிறுவனம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையூடாக இதற்கான நிதியினை வழங்கி வருகிறது. எனவே வேலணை பிரதேச சபையும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினருடன் இணைந்து இத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது. (பா)

# தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியா ஆதரவளிக்கவில்லை

## ஜே.வி.பி. கூறுகிறது

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா செயற்படவில்லை என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தின் இக்கொள்கை இன்றுவரை நீடித்து வருவதாக ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார்.

தேசிய பிரச்சினையைப் பொறுத்தவரை இந்திராகாந்தி பிரதமராக பதவி வகித்த காலத்திலிருந்து இலங்கைக்கு இந்தியா ஆதரவளித்ததில்லை. இலங்கையின் தேசிய பிரச்சினை இந்திய நலன்களுடனே கையாளப்படவேண்டும் என அவர் திட்டவட்டமாக சுட்டிக்காட்டியிருந்தார். தற்போதைய காங்கிரஸ் கட்சியின் தலைமையினாலும் இது பின்பற்றப்படுகிறது.

இந்நடவடிக்கையானது பொருளாதாரம் மற்றும் ஏனைய விடயங்களிலும் இந்தியாவுக்கு மேலும் பேரம்பேசும் சக்தியை அளிப்பதாகவும் இவையே இத்தீர்மானத்துக்கு காரணமாக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

இப்பிரேரணைக்கு ஆதரவளிக்கும் எந்த நாட்டையும் ஜே.வி.பி. கண்டிப்பதாகவும் இது நாடுகளின் இறைமையில் தலையிடும் விடயம் எனவும் அவர் கூறினார்.

# தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையின் மின் பொறியியலாளர்கள் நேற்று நண்பகல் 12 மணிமுதல் சட்டப்படி தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பாக மின்சார சபை நிர்வாகத்திடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதியுடனான கலந்துரையாடலின்போது இந்த பிரச்சினை உரிய தரப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எனினும் சம்பள விகிதாசார முரண்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்படாததை கண்டித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## கருணாநிதி....

நடைபெறவிருந்த தி.மு.க. உயர்மட்டக் கூட்டத்தையும் மன்மோகன் சிங்கின் அறிவிப்பையடுத்து கருணாநிதி இரத்துச்செய்துள்ளார்.

அதேவேளை ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்திற்கான தனது ஆதரவை விலக்கிக்கொள்ளப் போவதாக தான்ஒருபோதும் எச்சரிக்கவில்லை எனவும் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளிக்காவிட்டால் ஐ.மு.கூட்டணி அரசாங்தக்திற்கு தனித்தனி விவகாரங்களின் அடிப்படையில் ஆதரவளிப்பது குறித்து தனது கட்சி ஆராய்ந்ததாக அவர் கூறினார்.

## இந்தியாவின்...

அது ஏற்படுத்தும் தாக்கமே காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

இப்பிராந்தியத்தில் இந்தியா மிகப் பெரிய நாடாகும். இந்நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் அது பாரிய பாத்திரமாற்ற வேண்டியுள்ளது. உலகுக்கும் இந்நாட்டின் மக்களுக்கும் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் மேலும் பொறுப்புணர்வைக் கொண்டிருக்கும் என நாம் நம்புகிறோம்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படவுள்ள இப்பிரேரணையின் சரியான உள்ளடக்கம் இன்னும் எமக்குத் தெரியவில்லை. எனினும் நாட்டில் உறுதியான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உதவக்கூடிய, இந்நாட்டின் தேசிய மட்டத்தில் விவாதிக்கப்பட்ட சகல விடயங்களையும் அது உள்ளடக்கியிருக்கும் என நாம் நம்புகிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மழுப்பலான...

இந்தியப் பிரதமரின் அறிவிப்பில் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை, அவற்றுக்காக இலங்கை அரசை இந்தியா கண்டிக்கவும் இல்லை என ஜெயலலிதா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழர் விவகாரத்தில் தி.மு.க மத்திய அரசுக்கு அழுத்தம் தருவதாக கருணாநிதி அரங்கேற்றும் நாடகத்துக்கு துணை போகும் வகையில் பிரதமர் இந்த தெளிவற்ற அறிவிப்பைச் செய்துள்ளார் என ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

## ஹிலாரியை...

இந்நிலையில், ஜெனிவாவில் தற்போது நெருக்கடிகள் அதிகரித்துள்ளதை அடுத்து ஹிலாரி கிளின்டனை அவசரமாகச் சந்திக்க வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இதனிடையே, ஹிலாரி கிளின்டனின் அழைப்பை பீரிஸ் முன்னரே ஏற்றுக்கொண்டு வொஷிங்டன் சென்றிருந்தால், ஜெனிவாவில் இத்தகைய கடும் நெருக்கடிகளை குறைத்திருக்க வாய்ப்புக் கிடைத்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்க...

எதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணையின் இறுதி ஆவணம் எனக்கு இதுவரை கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும் இந்தப் பிரேரணைக்கு சார்பாக இந்தியா செயற்படுவதற்கான வாய்ப்பு பெரும்பாலும் உள்ளதென்பதை உறுதியாகக் கூறமுடியும். இலங்கையின் தமிழ் மக்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்து வதுடன் தமிழ் மக்களுக்கு சமத்துவம், கௌரவம், நியாயம் மற்றும் சுயகௌரவம் கிடைக்கும் என இந்தியா எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முல்லை உள்ளூராட்சி...

மீதான விசாரணை நிறைவுபெறும் வரை புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று ஆகிய பிரதேச சபைகளுக்கான தேர்தலை இடைநிறுத்துமாறு உத்தரவிட்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் பிரதிவாதிகள் அடுத்த மாதம் 27 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## ஜனநாயக...

அமைப்புடன் சந்திப்பை நடத்தியுள்ளனர். இவ்வாறான சந்திப்புக்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை என அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. இவ்வாறான கூட்டங்களின் மூலம், இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவளிக்குமாறு உறுப்பு நாடுகளிடம் நோர்வே மறைமுகமாக கோரி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நோர்வே அரசாங்கம், தொடர்ச்சியாக ஜனநாயக நாடொன்றின் இறைமையை உதாசீனம் செய்யும் வகையில் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளது.

# பரிந்துரைகள் அமுலாவதை எதிர்ப்பவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும்

## அமைச்சர் வாசு கூறுகிறார்



(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுவதனை எதிர்ப்பவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டுமென அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டுவதை கடுமையாக எதிர்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அரசாங்கமே நல்லிணக்க ஆணைக் குழுவை நியமித்தது. எனவே அதன் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டியது கட்டாயமாகும். எவராவது தவறு செய்திருந்தால் தண்டிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். இதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் இதனை கண்காணிப்பதற்கு வெளிநாட்டு அனுசரணை தேவையில்லை. உள்நாட்டு சட்டங்களுக்கமைய விசாரணைகள் நடத்தப்பட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது சிறந்ததாகும். எனவே பரிந்துரைகள் நிறைவேற்றப்படுவதை எதிர்க்கும் அரச தரப்பில் உள்ளோர் வெளியேற வேண்டும்.

தமிழர் எதிர்ப்பு யுத்தம் முடிந்து இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அபிவிருத்திகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னெடுத்து வருகின்றார். இவ்வாறானதோர் சூழ்நிலையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் கூட்டுப் பொறுப்புடன் செயல்பட வேண்டியது அவசியமானதாகும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் அமைச்சர் சம்பிக்க தமிழ் மக்களுக்கு எதிரான கருத்தை வெளியிட்டுள்ளமை பாரதூரமானதாகும்.

இத்தகைய கருத்துக்கள் அரசாங்கத்திற்கு பாதகத்தை ஏற்படுத்தும். எனவே அமைச் சர்கள் தமது கூட்டுப் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். அமெரிக்க எதிர்ப்பு அமைச்சர் விமல் வீரவன்சவின் அமெரிக்காவிற்கு எதிரான கருத்துக்களை வரவேற்கின்றேன். ஏகாதிபத்தியத்திற்கு எதிரான செயற்பாடு அது. ஆனால் பத்திரிகைகள் அமைச்சர் விமலின் கருத்தை கேலிக் கூத்தாக சித்திரிக்கின்றன. இதனை கடுமையாக கண்டிக்கின்றேன்.

எம்மால் எந்தளவுக்கு முடியுமோ அந்தளவிற்கு அமெரிக்கப் பொருட்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் எமது நாட்டுப் பொருட்கள் அதிகளவில் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் இது சாத்தியமானதாக இல்லை.

ஆனால் அமைச்சர் விமலின் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கருத்தை பத்திரிகைகள் கேலிக் கூத்தாக சித்திரிப்பது பத்திரிகைகளின் ஏகாதிபத்தியவாத அடிமைத்தனத்தை சித்திரிப்பதாக உள்ளது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தொலைந்ததா அடையாள அட்டை உடன் அறிவிக்கப் பணிப்பு

தேசிய அடையாள அட்டை தொலைந்திருந்தால் அது குறித்து உடனடியாக தெரிவிக்குமாறு ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஜகதீ விஜயனாக்க பொதுமக்களுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேசிய அடையாள அட்டை தவறுதலாக கைவிடப்பட்டிருந்தாலோ அல்லது தொலைந்திருந்தாலோ அது குறித்து உடனடியாக எனக்கு நேரடியாகத் தெரிவிக்க முடியும்.

இலங்கையில் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் தமது ஆளடையாளத்தை உறுப்படுத்த தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அடையாள அட்டைகள் தொலைந்திருந்தால் 0112583122 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக நேரடியாகவோ 0112593634 என்ற இலக்கத்தின் ஊடாக 'பக்ஸ்' மூலமோ தெரியப்படுத்தலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு எதிரான பிரேரணை இரு அணிகளாக சர்வதேசம் பிளவு

## அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறுகிறார்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையை வாக்கெடுப்பின் போது தோற்கடிப்பதற்கான கடின முயற்சியிலும் உழைப்பிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம் என்று ஜெனிவாவில் தங்கியுள்ள இலங்கைத் தூதுக்குழுவின் தலைவரும் அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை விவகாரத்தில் சர்வதேச நாடுகள் இரண்டு அணிகளில் பிரிந்து நிற்கின்றன.

இது மனித உரிமைப் பேரவைக்கு ஆரோக்கியமான விடயமல்ல என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் தூதுக்குழுவின் இராஜதந்திர நகர்வுகள் எந்த மட்டத்தில் அமைந்துள்ளன எனக் கருத்து தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# வைத்தியசாலை சிற்றூழியர்களும் நாளை முதல் பணிப் பகிஷ்கரிப்பு

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்தியசாலைகளில் பணிபுரியும் சிற்றூழியர்களும் நாளை முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் நாடளாவிய ரீதியிலுள்ள சிற்றூழியர் சங்கத்தின் 11 தொழிற்சங்கங்கள் கலந்து கொள்ளவுள்ளன.

சீருடைக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும், வாரத்தில் ஐந்து நாட்கள் வேலை, லீவு நாட்களில் கடமையாற்றினால் அதற்குச் சம்பளம் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்த தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக, தம்மால் பல்வேறு தடவைகள் அறிவிக்கப்பட்ட போதிலும், அது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத காரணத்தாலேயே தாம் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளதாகவும், சிற்றூழியர் சங்க பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து நாளை நண்பகல் 12.00 மணியளவில் கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்திலிருந்து சீமாட்டி றிச்வே சிறுவர் வைத்தியாசாலை, மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை, காசல் வீதி மகப்பேற்று வைத்தியசாலை மற்றும் சொய்சா மகப்பேற்று வைத்தியசாலை விலக்களிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐக்கிய தேசிய முன்னணி, கூட்டமைப்பு குறித்த சில விடயங்களில் இணைவு

குறிப்பிட்ட சில விடயங்களில் ஐக்கிய தேசியமுன்னணியுடன் இணைந்து செயற்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்பட்ட ஒரு சில விடயங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசியல் கூட்டணியில் அங்கம் வகிக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை விவகாரம், அரசியல் தீர்வுத் திட்டம், தேசிய இனப்பிரச்சினை போன்ற விடயங்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசியல் கூட்டணியில் இணைந்து செயற்படத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஓர் கட்டமாக எதிர்வரும் மே தினக் கூட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசியல் கூட்டணி ஒரே மேடையில் தோன்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி, மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி, ஸ்ரீதுங்க தலைமையிலான ஐக்கிய சோசலிசக் கட்சி, கலாநிதி விக்கிரமபாகு தலைமையிலான நவசமாஜக் கட்சி உள்ளிட்ட பிரதான எதிர்க்கட்சிகளின் மே தினக்கூட்டம் இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட உள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பாலும் கலந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கிய சில விடயங்களில் இணைந்து செயற்படுவது குறித்து ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மனித உரிமை மீறல் குறித்தும் ஆணைக்குழு விசாரணை செய்தது

## என்கிறது ஐ. தே. க.

(கொழும்பு)

இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பாக மட்டுமல்ல 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்ந்தே நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளதென்றும் தமிழ் மக்கள் மீது தாக்குதல் அல்லது அடக்குமுறைப் பிரயோகிக்கப்படுமானால சர்வதேச நாடுகள் இலங்கையில் நேரடியாக தலையீட்டை மேற்கொள்ளும் எனவும் ஐ.தே.கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல எச்சரித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை அமைச்சர் சம்பிக்க ரணவக்க முழுமையாக வாசிக்கவில்லையென்றே நினைக்கிறேன். பிரபாகரன் பயங்கரவாதம், இறுதிக் கட்ட யுத்தம் தொடர்பாக மட்டும் இவ் ஆணைக்குழு ஆராயவில்லை. மாறாக யுத்தத்திற்குள் மறைந்து கொண்டு மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

வெள்ளை வான் கடத்தல், ஊடகவியலாளர்கள் கொலை, அரசியல்வாதிகளின் கொலைகள், கடத்தல்கள், 17 ஆவது திருத்தம் நீக்கம், சுயாதீன ஆணைக்குழுக்கள், ஜனநாயகம் போன்ற விடயங்கள் தொடர்பில் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இறுதிக் கட்ட யுத்தம் வரையான கால கட்டத்தை ஆராய்ந்தே அறிக்கையையும் பரிந்துரைகளையும் தெரிவித்துள்ளது.

எனவே அரசாங்கத்திற்குள் அங்கம் வகிக்கும் சம்பிக தலைமையிலான ஜாதிக ஹெல உறுமய மற்றும் விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் அடிப்படைவாதம் இவ் அறிக்கைக்கு தவறான அர்த்தத்தை கற்பித்து சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு எதிரான உணர்வை ஊக்குவித்து இனக் கலவரத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன.

அவ்வாறான நிலையேற்பட்டு தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுமானால் இலங்கை மீது சர்வதேச நாடுகள் நேரடியாகத் தலையிடும் ஆபத்து உருவாகும்.

எனவே இனக்கலவரத்தை தோற்றுவிக்கும் முயற்சிகளை அரசாங்கம் ஆரம்பக் கட்டத்திலேயே முறியடிக்க வேண்டும் எனவும் கிரியெல்ல கூறியுள்ளார்.

# இணை அனுசரணை வழங்க கமரூன், நைஜீரியா முன்வருகை

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்க ஆபிரிக்க நாடுகளான கமரூனும் நைஜீரியாவும் முன்வந்துள்தாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தை தோற்கடிக்க வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆபிரிக்க நாடுகளுக்கு மேற்கொண்ட பயணம் வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கமரூன் சமர்ப்பிக்கலாம் என முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதையடுத்து கடந்தமாத பிற்பகுதியில் ஜெனிவா சென்றிருந்த அமைச்சர் பீரிஸ், அங்கிருந்து ஆபிரிக்க நாடுகளுக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டார். உகண்டா, நைஜீரியா, தென்னாபிரிக்கா மற்றும் கமரூன் உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்த அவர், ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைத் தோற்கடிப்பதற்கான ஆதரவைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டார்.

இது குறித்து கமரூன் பிரதமர் பிலெமொன் யாங் மற்றும் நைஜீரிய வெளிவிவகார அமைச்சர் ஒலுக்பெங்கா அயோடேஜி அசிருவுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

எனினும் இந்தப் பேச்சுவார்த்தைகளின் மூலம் இலங்கைக்கான ஆதரவைத் திரட்ட முடியாமல் போய் விட்டதாக தெரிய வந்துள்ளது.

# விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு மற்றும் ஓட்டுமடம் பகுதிகளில் வீடுகளுக் குள் அத்துமீறிப் புகுந்து வீட்டில் இருந்தவர்களை பொல்லால் மற்றும் கையால் தாக்கிய நால்வரை நாளை வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா. கணேசராசா உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.

(எஸ்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.